பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 27 ஞாயிற்றுக்கிழமை (12.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 256

# திருமலை சென்று குடியமர மறுத்தால் மூதூர் மக்களின் நிவாரணம் நிறுத்தப்படும்

## ஆளுநர் மொஹான் பணிப்புரை

திருகோணமலை,ஓகஸ்ட் 12

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது சொந்த இடங்களான மூதூர் கிழக்கு மற்றும் சம்பூரை விட்டு இடம்பெயர்ந்து மட்டக்களப்பு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமிழ்மக்களை திருகோணமலைக்குச் சென்று குடியமருமாறு அரசாங்கம் நிர்ப்பந்திக்கிறது.

அவ்வாறு செய்ய மறுப்பின், அவர்களுக்கு வழங்கப்படும் சகல வகையான நிவாரண உதவிகளும் நிறுத்தப்படும் என்று வடக்கு , கிழக்கு மாகாணங்களின் ஆளுநர் கொமடோர் மொஹான் ஜெயவிக்கிரம எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பான பணிப்புரையை அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மூதூர் கிழக்கு, சம்பூர், ஈச்சிலம்பற்று பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மட்டக்களப்பில் நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அவர்களை திருகோணமலையில் அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் காணிகளில் குடியமருமாறு அரச அதிகாரிகள் வலியுறுத்தி உள்ளனர்.

ஆயினும், தமது சொந்த இடங்களில் தம்மை குடியமர அனுமதிக்கவேண்டும் என்றும் இல்லையேல் தாம் மட்டக்களப்பிலேயே தங்கப் போவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த முரண்பாடு நிலையை அடுத்து திருகோணமலையில் மீளக்குடியமர மறுப்பவர்களுக்கான சகல வகை நிவாரணங்களும் நிறுத்தப்படும் என்று அதிகாரிகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.12

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

கப்பல் சேவை நேற்று இடம்பெற ஏற்பாடாகிப் பின்னர் ரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனவே நேற்று சனிக்கிழமை பயணம் செய்வதற்கென செயலகத்தில் பதிவு செய்து 'ரோக்கின்' பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் இன்று யாழ்.ரயில் நிலையத்துக்குச் செல்லும்படி அரச அதிபர் கேட்டுள்ளார்.

வேறு நாள்களில் கப்பலில் பயணம் செய்ய செயலகத்தில் பதிவு செய்து பயண அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் பதிவு செய்த திகதிக்கு மறுநாள் பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மடுமாதா ஆலயப் பெருவிழாவில் கொழும்பு மேற்றிராணியார் திருப்பலி

### தெற்கிலிருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள்

கொழும்பு,ஓக.12

எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள பிரசித்திபெற்ற மடுமாதா தேவாலய பெருவிழாவில் கொழும்பு மேற்றிராணியார் அதிவண ஒஸ்வால்ட் கோமஸ் பங்குகொண்டு திருவிழாத் திருப் பலியை ஒப்புக்கொடுப்பார்.

அவருடன் இணைந்து அனுராதபுரம், காலி, மன்னார் ஆயர்கள் திருப்பலியை ஒப்புக்கொடுத்து உற்சவத்தை நடத்தவிருக்கின்றனர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின் கொழும்பு மேற்றிராணியார் ஒருவர் மடு மாதா ஆலய உற்சவத்தை வழிப்படுத்துகிறார்.

மடு உற்சவத்தில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பக்தர்கள் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்மாதம் 6ஆம் திகதி ஆரம்பமான மடுமாதா உற்சவத்தில் இறுதி நாளான எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு வேண்டிய தங்குமிட மற்றும் வசதிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கத்தோலிக்க மக்களின் முக்கிய ஸ்தலங்களில் ஒன்றானமடுவுக்கு தென்னிலங்கையில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – புலிகள் இரகசிய இணக்கப்பாடு: நாடாளுமன்றில் விரைவில் ஒரு நாள் விவாதம்

### இந்த வழிமுறையை நிராகரிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஓக.12

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்ததாகக் கூறப்படும் இரகசிய இணக்கப்பாடு தொடர்பாக நாடாளுமன்றில் விரைவில் முழுநாள் விவாதம் நடத்தப்படும்.

சபை முதல்வரும் சுகாதார அமைச்சருமான நிமால் ஸ்ரீபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்

(10ஆம் பக்தம் பார்க்க)

## ஒரு வாரத்தில் குடாநாட்டில் 10 பேர் படுகொலை; கிழக்கில் 45 பேர் பலவந்தமாகத் தடுத்துவைப்பு

### போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிந்திய அறிக்கையில் தகவல்

கொழும்பு,ஓக.12

குடாநாட்டில் ஒருவாரத்தில் மட்டும் 10 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கிழக்கில் 45 பேர் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்பு குழு விடுத்துள்ள ஆகப்பிந்திய அறிக்கையில் (ஜூலை 30 - ஓகஸ்ட் 5) இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு -

* யாழ்ப்பாணத்தில் அசாதாரண நிலை தொடர்கின்றது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து வருவதால மக்களின் நாளாந்த வாழ்க்கையும் மற்றும் பிரதேச பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளன.

* யாழ்ப்பாணத்தில் கடந்த டிசெம்பர் மாதத்துக்கு பின்னர் கடந்த 31ஆம் திகதி

(10ஆம் பக்கம் பார்க்க)

### வெளிமாவட்டம் செல்வதற்கு

## 55 வயதுக்கு மேற்பட்டவர்களும் இனி பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும்

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் 55 வயதுக்கு மேற்பட்டவர்களும் இனி மேல் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும்.

இந்த நடைமுறை இன்று தொடக்கம் அமுல் செய்யப்படுகின்றது.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு இத்தகவல்களை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெவிக்கப்பட்டுள்ளதாவது:-

55 வயதுக்கு மேற்பட்டோரும் 10 வயதுக்கு குறைந்தவர்களும் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பாதுகாப்பு அனுமதி பெறத் தேவையில்லை என கடந்த மாதம் 30ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் துணைக் குழுக்களின் ஆயுதங்களை களைவதாக ஹோம்ஸுக்கு ஜனாதிபதி வாக்குறுதி

கொழும்பு, ஓக. 12

கிழக்கில் செயற்படும் துணைக்குழுக்களின் ஆயுதங்களை களைவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்துள்ளார்.

ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பு வந்திருந்த ஐ.நா. மனித நேயப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் ஜனாதிபதியுடன் கடந்த வியாழக்கிழமை பேச்சு நடத்தினார்.

அந்தப் பேச்சுவார்த்தையின்போது, ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு எந்தெந்த வழிகளில் தீர்வு காணலாம் என்பது குறித்தும் ஜனாதிபதியும் ஹோம்ஸூம் கலந்து பேசினர். மனிதாபிமானப் பணிகளை முன் னெடு[illegible] உதவிகள் வழங்குவதும் பற்றி விரிவா[illegible] பேசப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜோன் ஹோம்ஸின் கருத்துக் குறித்து நாடாளுமன்றில் விவாதம் நடக்கும்

கொழும்பு,ஓக.12

மனிதநேயப் பணியாளர்களுக்கு ஆபத்தான நாடு இலங்கை என்று ஐ.நா. மனிதநேயப் பணிகளுக்கான உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் கருத்து வெளியிட்டமை தொடர்பாக, நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி விவாதம் நடைபெறும்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது இந்த விவாதம் தொடர்பாக ஆராயப்பட்டது.

சகல கட்சிகளும் விவாதம் நடத்த ஒப்புதல் அளித்தன. ஜே.வி.பியின் உறுப்பினர்களால் (10ஆம் பக்கம் பார்க்க)

## ஜானக பெரேரா அரசியலுக்கு?

கொழும்பு,ஓக.12

யாழ்.மாவட்டத்தில் படைகளின் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா அரசியலில் பிரவேசிக்க உள்ளதாக அறியவருகிறது.

அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னோடியாகவும் யுத்தத்தில் உயிரிழந்த படையினரை நினைவுகூர்ந்தும் களுத்துறையில் உள்ள விகாரையில் நேற்று போதி பூசை ஒன்றை அவர் நடத்தினார்.

அரசியலில் அவர் பிரவேசிக்கிறார் என்பது நிச்சயமாகி வருகிறது. எனினும் அவர் எந்த அரசியல் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படப் போகிறார் என்ற தகவல் எதுவும் இன்னும் வெளிப்படையாகவில்லை.

பாதுகாப்பு அமைச்சின் (10ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா - ரணில் - மங்கள 26ஆம் திகதி ஒரே மேடையில்

கொழும்பு,ஓக..12

நித்தம்புவவில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் அரச எதிர்ப்புப் பேரணியில் சந்திரிகா, ரணில், மங்கள ஆகியோர் ஒரே மேடையில் தோன்றவுள்ளனர்.

ஐ.தே.கட்சியும்.ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் பிரிவும் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வருவது தெரிந்ததே.

இந்தப் போராட்டத்தின் முதற்கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது. இரண்டாவது கூட்டம் மீரிகமவில் இடம்பெற்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீண்டும் யாழ்.நகரில் Bata



எம்மிடம் மாணவர், உத்தியோகத்தர், வாலிபர், இளம் பெண்கள், சிறு பிள்ளைகளுக்கான அழகாக வடிவமைக்கப்பட்ட

சப்பாத்துக்கள், பிளற்போம் பாதணிகள், ஹீல்ஸ், லெதர் பாதணிகள், நவீன ரபர் பாட்டாக்கள், 'ஆரோக்கிய' ரபர் பாட்டாக்கள்

என்பன உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**லக்ஷ்மி ஒகனைசேஷன்**

(வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்)

இல. 25, 4ஆம் லேன், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(எமது இடம் பிறவுண் வீதியில் உள்ள மின்சார நிலைய காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் அமைந்துள்ளது)

(சி/53101)



# சங்கீதா ஏஜென்ற் WESTERN UNION

இதோ!

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் MMBL நிறுவனத்தின் பணப்பரிமாற்ற உபமுகவர் நிலையம் இல: 412, ஆஸ்பத்திரி வீதியில் செயற்பட தொடங்கியுள்ளது.

வெளிநாட்டிலிருந்து உங்கள் உறவினர் அனுப்பும் பணத்தினை அடுத்த சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பெற்றுக்கொள்ள வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றத்தினை பயன்படுத்துங்கள்.

இலகுவாகவும், பாதுகாப்பாகவும், நம்பகரமாகவும், உங்கள் பணத்தினை பெற்றுக்கொள்ள, யாழ்ப்பாணத்தில் உபமுகவர், **சங்கீதா ஏஜென்ற்** அத்துடன் உங்களுக்கு தேவையான உள்ளூர், வெளியூர் அழைப்புக்கள் மற்றும் பக்ஸ், போட்டோப்பிரதி என்பனவற்றையும் இங்கு குறைந்த கட்டடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சங்கீதா ஏஜென்ற் அன் தொலைத் தொடர்பகம்,**

**இல. 412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

T.P. & Fax 8546. (HNB வங்கி அருகில்). (63279)


# நன்றி நவிலல்

எங்கள் பாசமிகு குடும்பத் தலைவன் எஸ்.சகாயசீலன் (யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியற்றுறை, சிரேஷ்ட விரிவுரையாளர்) மருத்துவமனையில் இருந்த பொழுதும், அவரது பிரிவின் பொழுதும் எங்களுக்கு ஆறுதல் அளித்து உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர், துணைவேந்தர், துறைசார் தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எமக்கு ஆறுதல் கூறிய மதகுருமார்கள் எல்லாவற்றிற்கும் மேலாக எமக்கு உறுதுணையாகவிருந்த உண்மையான நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் நேரில் கலந்து கொண்டும் மலர்வளையங்கள் வைத்தும், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**சகாயசீலன் குடும்பத்தினர்.**

(63277)

# துயர்பகிர்ந்தோர்க்கு நன்றிகள்

கடந்த 01.08.2007 புதன்கிழமை அன்று அகால மரணமடைந்த எமதருமை மகன் அமரர் சகாதேவன் நிலக்ஷனின் பிரிவில் அக்கணம் தொடக்கம் இறுதிவரைக்கும் எமதருகில் இருந்து எம்முடன் துயர் பகிர்ந்தவர்களுக்கும் அமரரின் உடலினை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல உதவியோர், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை சமூகம், ஏனைய கல்விச் சமூகத்தினர்க்கும் மற்றும் தொலைபேசி, தொலைநகல் மூலம், ஏனைய வழிகளிலும் ஆறுதல் வார்த்தை கூறி, எம் துயருடன் இணைந்த அனைவருக்கும், இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோர், அஞ்சலி உரை நிகழ்த்தியோர் மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

47, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

**குடும்பத்தினர்.**

(63276)

# மரண அறிவித்தல்

## ஞானப்பிரகாசம் அன்ரனிதாஸ் (பட்டு)



யாழ்ப்பாணம், நல்லூர், இல. 50, கடுக்காயடி லேனைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அன்ரனிதாஸ் (பட்டு) 10.08.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் - இராசாத்தியம்மா (லண்டன்) தம்பதியரின் அன்பு மகனும் சின்னத்துரை - செல்வபத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் வனஜாவின் (லண்டன் - முன்னாள் காணித் திட்டமிடல் அதிகாரி - யாழ். கச்சேரி) அன்புக் கணவரும் சஞ்சீவன் (லண்டன்), கரீசன் (லண்டன்), திவ்யா (லண்டன்), நித்ரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்ரனி ரவிச்சந்திரன் (லண்டன்), அன்ரனிராஜ் (பிரான்ஸ்), அன்ரனி டக்ளஸ் (லண்டன்), அன்ரனி சிமித் (லண்டன்), அன்ரனி பேஜ் (லண்டன்), சறோமினா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாரூபன் (ரூபன் ஸ்ரோர்ஸ்), வினோபாகரன் (அமெரிக்கா) மற்றும் சென் ஜோன்ஸ் ராஜா (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'காண்டீபம்',
இல. 64/8, ஸ்ரேஷன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773604466.

தகவல்:
கலாரூபன் (ரூபன் - மைத்துனர்)
சின்னத்துரை குடும்பம்

(63281)


# தவறிவிட்டது

NP.MT 6584 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு 03.08.2007 அன்று இணுவிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் [illegible] கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் (A.C.C.D.OFFICE), தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 0779001305. (63272)


# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை பத்திநாதன்

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)



ஊர்காவற்றுறை சென். மேரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பத்திநாதன் 10.08.2007 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - றீற்றம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தேனுகா (ஆசிரியை, வடமராட்சி மத்திய கல்லூரி), தேவதர்சன், தேவதயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி யோகநாதன் அல்வீனம்மா, மேரி மாகிரட் (அருட்சகோதரி), மேரி ஞானசீலி (அருட்சகோதரி), சிந்தாத்துரை (ப.தெ.வ.அ.கூ. சங்கம் - ஊர்காவற்றுறை), மேரி பொறின் (ப.நோ. கூ. சங்கம் ஊர்காவற்றுறை), செபநேசன் (அசெம்பிளி ஒப் கோட், மன்னார்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பேரம்பலம், இளையதம்பி, யோகநாதன், தேவராசா, தவரஞ்சிதம், சுகந்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஊர்காவற்றுறை சென். மேரிஸ் வீதியிலுள்ள அவரது பிறப்பிடமான இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (13.08.2007) முற்பகல் 9 மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியாள் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி பூசையின் பின் ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(குறிப்பு: 11.08.2007 உதயன் பத்திரிகையில் வெளியான முந்திய அறிவித்தலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது).

சென். மேரிஸ் வீதி,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இராமநாதன் சின்னம்மா

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் விடத்தல்பளை, மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் சின்னம்மா (11.08.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சிதம்பரப்பிள்ளை இராமநாதனின் அன்பு மனைவியும் பரமநாதன், சிதம்பரநாதன், திருமதி ஜெகதீஸ்வரி சின்னத்துரை, பத்மநாதன், தம்பயைா, குணநாதன் (அதிபர், யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), திருமதி விக்கினேஸ்வரி கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் ஐயாத்துரை, திருமதி கணபதிப்பிள்ளை, திருமதி முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நாவற்காடு, வரணியில் உள்ள பரமநாதனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
வரணி.

தகவல்:
இ. [illegible]நாதன்
(மகன்)

(63284)

# கண்ணீர்க் காணிக்கை



எமது காரை துரித காகிதாதிகள் சேவைகள் நிலையங்கட்டட உரிமையாளரும், இடைப்பிட்டி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், லண்டனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முன்னாள் பிரபல ஒப்பந்தகாரரும் சமய, சமூக, பொது அபிவிருத்தி வேலைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, தன்னால் இயன்ற உதவிகள் மூலம் பல உயிர்களை அர்ப்பணிப்புடன் காப்பாற்றி வந்த சேவையாளரான

**அமரர் சண்முகம் சின்னர் செல்லத்துரை**

அவர்களின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

"K Q D S"

**காரை துரித காகிதாதிகள் சேவைகள்,**
ஆஸ்பத்திரி வீதி, காரைநகர்.

(63257)

# மரண அறிவித்தல்கள்

## கலைச்சுடர் சுப்பிரமணியம் குணராசசிங்கம்

(சவாரி பெரிய அண்ணை)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணராசசிங்கம் 10.08.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகனும் சின்னத்தம்பு - அருந்தவநாயகி தம்பதியரின் மருமகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமாரசிங்கம் (நடுவில் அண்ணை) மற்றும் சுந்தரலிங்கம் (லிங்கண்ணை), காலஞ்சென்ற ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் றோகினி (அதிபர், யா/நடேஸ்வர கனிஷ்ட வித்தி.), அனுசன் (ஆதவன் றேட்ஸ் சென்ரர் - மல்லாகம்) ஆகியோரின் தந்தையும் தயானந்தனின் (மின் இணைப்பாளர், லங்கா சிமெந்து நிறுவனம்) மாமனும் ரவிசாந், சங்கவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2007) முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழக்கு வளவு,
மல்லாகம்.
தொ.பே.: 0776158738.

தகவல்:
சு.அனுசன்
(மகன்).

(சி.53225)

## கார்த்திகேசு கனகரெத்தினம்

(இளைப்பாறிய சுகாதார பரிசோதகர், மேற்பார்வையாளர்)



கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கனகரெத்தினம் 06.06.2007 கனடா, ஸ்காபரோவில் காலமானார்.

அன்னார் அபிராமியின் அன்புக் கணவரும், பாலேஸ், ஞானேஸ், பத்மினி, இந்திராணி, றஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மதனாகரன், பரமேஸ்வரன், ஸ்ரீபிரகாஷ், உருத்திரா, மகேந்திரன், கிறிஸ்ரினா ஆகியோரின் அன்பு மாமனும் தயாபரன், அஜந்தி, அனுஷா, கிருசானா, அருச்சுனன், ராதிக்கா, ரேணுகா, அஞ்சலா, தானியா, மீரா, ஜவாணா, ஸ்லீவ், ஸ்ரான்றா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜனனியின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.06.2007 கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனடா.
தொ.பே.: 4164380410.

தகவல்:
திருமதி பாலேஸ் மதனாகரன்.

(63274)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரைத் தொடர விரும்பும் அரசியல் போக்கு வரலாற்றில் இழைக்கப்படும் பெரும் தவறு!

நாட்டின் இன்றைய அரசியல் நிலை குறித்து முன்னாள் இராணுவத் தளபதிகளுள் ஒருவரான ஜெனரல் ஜெனரல் ஹமில்டன்வனசிங்க 'இருதின' சிங்களப் பத்திரிகைக்குத் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு இது.

ஒத்தமது நாடுகளில் நிலவிய தேசிய பிரச்சினைக்கு எந்தவொரு நாடும் யுத்தத்தின் மூலம் முற்றுமுழுதான தீர்வு கண்டதாக எந்தவொரு வரலாறும் கிடையாது. அத்தகைய விதத்தில் ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது. அவ்வாறானால், இராணுவத்தினரையும் ஆயுதங்களையும் ஓர் அரசு எதற்காகப் பேண வேண்டுமென்ற கேள்வி எழுவதும் நியாயமே. நாட்டில் ஏற்படும் குழப்பமொன்றை அடக்கவோ அல்லது பிரச்சினையொன்றைக் கட்டுப்படுத்தவோதான் பெரும்பாலும் இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டி ஏற்படும். அதன்பின்னர் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு மேற்கொள்வதன்மூலம் மேற்கொள்ளப்படும் தீர்மானத்துக்கு அமைவாகக் குறிப்பிட்ட பிரச்சினைக் குத் தீர்வு காணப்பட முடியும். இராணுவ நடவடிக்கையின் நோக்கம் சமாதானத்துக்கும் பேச்சுக்குமான பின்னணியை உருவாக்கிக் கொடுப்பதேயல்லாமல், முடிவற்ற விதத்தில் மனிதப் படுகொலைகளையும் அழிவுகளையும் ஏற்படுத்துவதல்ல.

இந்த நாட்டின் தீவிரவாதப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான - எதிரிகளை அழித்தொழிக்கும் வகையிலான நடவடிக்கைகளே அவசியமானவை என ஒரு சில தரப்பினர் வெளியிடும் கருத்துக் குறித்து நான் கவலையடைகிறேன். அவை யுத்த மனோபாவத்துக்குத் தூண்டுதலளித்து வளர்ப்பதற்கு ஆர்வம் காட்டும் விதத்திலான கருத்து வெளிப்பாடுகளாகும்.

கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகள் காலமாக நாம் நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரச்சினை தொடர்பாக செயற்பட்ட விதத்தால் பெருந்தொகையான உயிரிழப்புகளையும் பெருமளவிலான சொத்திழப்புகளையும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் சந்திக்க நேர்ந்ததல்லவா? கோடிக்கணக்கான நிதியை விரயம் செய்து இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடச் செய்திருக்கிறோமல்லவா? இவற்றாலெல்லாம் எம்மால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிந்ததா? இல்லையே! யுத்த ரீதியிலான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க, முன்னெடுக்க பிரச்சினைக்கானத் தீர்வு மற்றும் மோதல்களுக்கான முடிவை எட்டும் வாய்ப்பு என்பவை தொடர்பான இணக்கமொன்றை எட்டுவதற்குச் சம்பந்தப்பட்ட அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய இரு தரப்பினரும் முன்வரும் வாய்ப்பு அற்றுப் போய் விடுகிறது. அத்தகைய மார்க்கத்தினின்றும் இவ்விரு தரப்புகளும் தூர விலகிச் செல்லும் நிலையே உருவாகின்றது.

**பாரதூரமான தவறை மீண்டும் மீண்டும் மேற்கொள்ளுகிறோம்**

அரசதரப்பைப் போன்றே, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கடுங்கோட்பாட்டுக் கட்சிகளும் ஏனைய சில அமைப்புகளும் மீண்டும் மீண்டும் யுத்தத்தின் மூலமான தீர்வு என்பதையே வலியுறுத்தி வருவதேன்? என்பதைப் புரிந்துகொள்ள இயலாதுள்ளது. இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் முன்னர் நாம் மேற்கொண்ட பாரதூரமான தவறை மீண்டும் மீண்டும் மேற்கொள்கிறோம் என்பதன்றி, இதனை வேறெந்த விதத்திலும் விளக்கிக் கூற இயலாதுள்ளது.

அரச தரப்பிலுள்ள ஒருசிலர் கூட பேச்சு மூலம் இந்நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற கருத்து நிலைப்பாடு கொண்டுள்ளனர். மற்றொரு தரப்பினரோ இதற்கு எதிர்மாறான கொள்கை நிலைப்பாடு கொண்டுள்ளனர். இந்த நிலையில் உறுதியான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு நாட்டின் தலைமைத்துவத்தை வகிப்பவருக்கே உள்ளது. ''சாத்தியப்படாத சிகிச்சைக்கு கொசு எண்ணெய் தேடிக்கொண்டு'' என்ப பணித்தது போன்று, பொய்யான காரணங்களைக் காட்டிச் சாத்தியப்படாத நிபந்தனைகளை விதிக்கும் அணுகுமுறையே இந்த விடயத்தில் அரசினால் கைக்கொள்ளப்படுவதாகக் கருதமுடிகிறது. தொப்பிகல உட்பட கிழக்கு மாகாணம் முழுமையையும் முற்றாக விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவித்து விட்டோமென அரச தரப்பினர் வெற்றிக் கோஷமிட்டு வருகின்றனர். தாமே வீராதி வீரர்களென அரச தரப்பு அரசியல்வாதிகள் அனைவருமே வெற்றி முழக்கம் இட்டு வருகின்றனர். அது போதாதென்று பாடசாலை மாணவ, மாணவியரையும் அரச ஊழியர்களையும் வற்புறுத்தி 'தொப்பிகல' வெற்றியைக் கொண்டாட வைத்தனர்.

உண்மையில் கிழக்கு மாகாணத்தில் அரச படையினர் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியீட்டியுள்ளதை ஏற்றுத்தானாக வேண்டும். ஆனால், அதனை முற்றுமுழுதான வெற்றியெனவோ, கிழக்கு மாகாணம் முற்றுமுழுதாக விடுவிக்கப்பட்டு விட்டதாகவோ பெரிதுபடுத்தி வர்ணிக்க இயலாது. அவ்விதம் வர்ணித்து வெற்றிக் கோஷமெழுப்ப விசேடமாக அரசினாலோ அல்லது அரசியல்வாதிகளாலோ முடியாது. தம்மால்தான் மாவிலாறு பிரச்சினையில் ஆரம்பித்து, அரசினால் கிழக்கு மாகாணத்தை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததாக ஜே.வி.பியினர் பெருமையடித்துக் கொள்கின்றனர். ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த துறவிகளும் அதே விதத்தில் வெற்றிக்கு உரிமை கொண்டாட முனைகின்றனர். இதனாலேயே அரச தரப்பு உயர்மட்டங்களும்கூட குருடர்கள் போலச் செயற்படுவதாகக் கூறவேண்டியுள்ளது.

**சகல பிரச்சினைகளும் பேச்சு மூலமே தீர்க்கப்படவேண்டும்**

வடக்கு, கிழக்குப் பிரச்சினை உட்பட்ட சகல பிரச்சினைகளையும் பேச்சு மூலம் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளத் தக்க தீர்வொன்றைக் காணும் வரையும், கிழக்கு மாகாணம் மட்டுமல்ல, முழு நாடுமே விடுதலைப் புலிகளது பயமுறுத்தலிலிருந்து பூரணமாக விடுபட்டதாகக் கூறிக்கொள்ள இயலாது. இதன்காரணமாகவே சர்வ தேச சமூகத்தைப் போன்றே, புரிந்துணர்வுள்ள சகலரும் யுத்தத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து பேச்சுமூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலுமாறு எப்போதுமே வலியுறுத்தி வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் வெற்றியையடுத்து வட பகுதி மீது தாக்குதல்களை மேற்கொண்டு விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாகத் தோற்கடிக்க முடியுமென்பது நடைமுறையில் சாத்தியப்படாததொரு முயற்சியே என்பதை ஏற்றுக்கொண்டாக வேண்டும். தற்போதுகூட நாட்டின் வாழ்க்கைச் செலவினம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளமைக்கான முக்கிய காரணம், யுத்தத்தை முன்னெடுப்பதற்காக அரசு பெரும்தொகை நிதியைச் செலவிட நேர்ந்திருப்பதேயாகும். இந்த நாடு வறுமை நிலை நிலவும் சிறிய தொரு நாடு என்பதை நாம் நினைவில் கொள்வது அவசியமாகும்.

அரசுமீது தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்து வருகின்றனர். ஆனால், அவர்களைச் சர்வதேச சமூகத்தினூடாக நாம் பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு அழுத்தம் மேற்கொள்ள வைப்பிக்க இயலும். அதற்காக நாம் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டியுள்ளது என்பது குறித்தும் நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

**சர்வதேசத் தரப்புகளை விமர்சிப்பதைத் தவிர்க்கவேண்டும்**

வெளிநாட்டு அரசுகளையோ அல்லது நிறுவனங்களையோ அவற்றின் பிரதிநிதிகளையோ திட்டித் தீர்ப்பதை அரச தரப்பைச் சேர்ந்தோர் உட்பட அரசியல்வாதிகள் நிறுத்தியாகவேண்டும். அதுமட்டுமன்றி, அத்தரப்புகள் குறித்து விமர்சிப்பதையும் தவிர்த்தாகவேண்டும். பிரச்சினை ஏதாவதிருப்பின் அவற்றை ராஜதந்திர மட்டத்தில் தீர்த்துக்கொள்ள முயலல் பொருத்தமானதாகும். தற்போது இலங்கைக்கு உதவிகள் வழங்கி வந்த வெளிநாடுகளும் தமது உதவிகளை நிறுத்தியுள்ளன. இத்தகைய தரமற்ற விமர்சனங்கள் காரணமாகச் சர்வதேச நட்புத் தரப்புகளின் உதவியை இழக்க நேர்வது மட்டுமே இதனால் விளையப்போகும் பலாபலனாகும். அது மட்டுமன்றி, விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு வரவழைக்கும் முயற்சிக்குக் கூட அது பாதிப்பை ஏற்படுத்துவதாய் அமையக்கூடும்.

அண்மையில் வவுனியாவில் இராணுவ வீரர்கள் பயணித்த பஸ் வண்டியொன்று கண்ணிவெடியில் சிக்கிய சம்பவத்தில் இராணுவ வீரர்கள் பத்துப் பேர் வரையில் உயிரிழக்க நேர்ந்தது. வவுனியாவில் இடம்பெற்ற அந்த பயங்கரச் சம்பவம் குறித்து கணக்கிலெடுக்காது - பெரிதுபடுத்தாது எமது அரசியல் தலைவர்கள் நாடு பூராவும் தொப்பிகல வெற்றி குறித்த வெற்றிக்கோஷம் எழுப்பி வருகின்றனர். கேளிக்கை விழாக்களை ஒழுங்குசெய்து கொண்டாடுகின்றனர். இதனை எமது இராணுவ வீரர்களுக்குச் செய்யும் மிகப்பெரிய அவமரியாதை - அகௌரவம் என்பதாகவே நான் நினைக்கின்றேன்.

எமது இராணுவ வீரர்களை மதிக்கும் விதம் இது தானா? என வினாவ நான் விரும்புகிறேன். அரசும் மற்றைய அரசியல்வாதிகளும் பெருமெடுப்பில் தெரிவித்துவரும் இராணுவ வீரர்களுக்கான கௌரவம் என்பது வெறும் வார்த்தைகளுடன் முடிந்து போய்விடுமென்றா எனக் கேட்க நான் விரும்புகிறேன்.

**அரசியல் தாழ்வு மனப்பான்மையும் ஏமாற்றும் போக்குமே காரணமாகும்**

சரி, இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறமைதல் வேண்டும்? எதற்காக இத்தனை தூரம் கயிறிழுப்பில் ஈடுபடுகிறீர்கள்? சகல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும்கூட இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு ஏதோ ஓரளவுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதில் இணக்கப்பாடு கண்டுள்ளன. இதனைச் சகல தேர்தல் பிரசார மேடைகளிலும் அரசியல்வாதிகள் வற்புறுத்தித் தெரிவித்து வருகின்றனர். ஒவ்வோர் அரசியல் கட்சியும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதனை வலியுறுத்தி, கொள்கை நிலைப்பாடாக வெளிப்படுத்தி வருகின்றன. ஆனால், தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் ஒரு தரப்பினர் மேற்கொள்ள முயலும் நடவடிக்கையை மேற்கொள்ள இயலாத விதத்தில் மற்றொரு தரப்பினர் காலைவாரி விடுகின்றனர். டட்லி செல்வநாயகம் ஒப்பந்தம், பண்டார நாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் என்பவற்றுக்கு அன்று பௌத்த பிக்குமார் குறுக்கே நின்று அவற்றைச் செயலிழக்கச் செய்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அச்சம் எதுமின்றி, நோர்வேப் பிரதிநிதிகளூடாக பேச்சு குறித்தும் தீர்வுயோசனைகள் குறித்தும் முயற்சிகளை மேற்கொண்டார். அத்தகைய முயற்சிகளில் குறைநிறைகள் இருந்தாலும்கூட சந்திரிகாவின் அந்த முயற்சியை நான் மதிக்கின்றேன். சந்திரிகாவின் அத்தகைய முயற்சிகளை ஐ.தே.கட்சி, பௌத்த துறவிகள் தரப்பு மற்றும் வேறு சில சக்திகளும் தமது எதிர்ப்பின் மூலம் பயனற்றதாக்கி விட்டிருந்தனர். ரணில் விக்கிரமசிங்க தாம் பிரதமராகப் பதவி வகித்தவேளையில் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாகப் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் பேச்சுகளை முன்னெடுக்க முயன்றவேளையில் அரச தரப்பு ஜே.வி.பியையும் தமது பக்கம் சேர்த்துக் கொண்டு, அவ்விரு தரப்புகளுமாக ரணிலின் கால்களை வாரிவிட்டன.

அதிகாரப் பகிர்வொன்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் விடயத்தில் எதற்காக இவ்விதம் பேராசைப் படவேண்டும்? அதிகாரத்திலிருக்கும் அரசு இத்தகைய பாரிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் வெற்றி ஈட்டிக்கொள்ளப் போகிறதே, என்ற அரசியல் தாழ்வு மனப்பான்மை மற்றும் ஏமாற்றும் போக்கு என்பவையே இதற்கான அடிப்படைக் காரணமாகும். அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் இருக்கும் பேராசைப் போக்கு ஆகக் குறைந்தது மாவட்ட சபைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தாலாவது இன்று தீர்வுக்கான வழி பிறந்திருக்கும். அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டபோதிலும் அது வும்கூட ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறித்துக்கொண்டமை போன்றாகியது. அதன் காரணமாகவே அந்தத் திட்டமும் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. ஏன் இந்தப் பேராசை? இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஆட்சி முறைமையே எமக்குப் பொருத்தமானதொன்று என்பதே எனது அபிப்பிராயமாகும். அந்த அரசியல் நிர்வாக நடை முறை எமது அயல்நாடான இந்தியாவில் கடந்த பல ஆண்டுகளாக வெற்றிகாமாக நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. அரசியல் ரீதியிலான பொறாமை, பேராசை என்பவற்றை நாம் கொண்டிருப்போமானால் இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் எம்மால் தீர்வு காண இயலாது.


முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க

அங்கு தான் உண்மையில் நாம் தவறிழைக்கின்றோம். ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட போர் நிறுத்த உடன்பாட்டையும் நடவடிக்கைகளையும் நான் மதிப்பதற்கான காரணம் அதுவேயாகும். இராணுவத்தினரின் தரப்பிலும் குடிசார் பொதுமக்கள் தரப்பிலும் உயிரிழப்புகள் குறைவடைந்தமைக்கு அந்தப் போர் நிறுத்த உடன்பாடே காரணமாகும். ஆனால், அந்தப் போர்நிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகளை நேர்சீர் செய்து அதனைத் தொடர்ந்தும் முன்னோக்கி நகர்த்த ஜே.வி.பி, பௌத்த துறவிகள் தரப்பு மற்றும் ஜனாதிபதி சந்திரிகா ஆகிய எத்தரப்பினரும் அந்தவேளையில் முன்வரவில்லை. எவ்வாறாவது அந்தப் போர்நிறுத்த உடன்பாட்டை முறிவடையச் செய்யவே அத்தரப்பினர் விரும்பினர். அன்று அத்தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் இன்று இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் நாம் எவ்வளவோ தூரம் முன்னோக்கி நகர்ந்திருக்க வாய்ப்புக் கிட்டியிருக்கும். அன்று உண்மையில் பேச்சுகளுக் கான வாய்ப்புகள் தடுக்கப்பட்டன.

**ரணில் செய்த மாபெரும் தவறு**

அந்தவேளையில், நாட்டின் பாதுகாப்புப் படைகளது சேனாதிபதியாகவும் நாட்டின் ஜனாதிபதியாகவுமிருந்த சந்திகாவைத் தமது சமாதான முயற்சிகளில் இணைத்துக்கொள்ளாது, தனித்து நின்று போர்நிறுத்த உடன்பாட்டை ரணில் மேற் கொண்டமை ரணில் செய்த மாபெரும் தவறாகும். நாட்டின் ஜனாதிபதியின் ஆதரவின்றி நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலுமா? போர்நிறுத்த உடன்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகளை சகல கட்சிகளின் உடன்பாட்டுடன் நேர்சீர் செய்து ரணில் அதனை முன் நகர்த்தியிருந்திருக்கவேண்டும். ஆனால், விட்டுக் கொடுக்காத தன்மை காரணமாக அதனைத் தேசியப் பிரச்சினையொன்றாகக் கருதிச் செயற்படுவதற்குப் பதிலாக அது அரசியல் போட்டியென்ற தோற்றத்தை வெளிப்படுத்தும் அதிகார இழுபறியாக ஆக நேர்ந்தது.



நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வே காணப்பட முடியுமேயன்றி வேறெந்தவிதத் தீர்வு முயற்சிகளும் ஒருபோதும் பயனளிக்கப்போவதில்லை. விடுதலைப் புலிகள் என்றைக்குத் தம் கைகளிலுள்ள ஆயுதங்களைக் கைவிடுகின்றார்களோ, அன்றைக்கே நாட்டின் பிரச்சினை முடிவுக்கு வரும். அதனை யுத்தத்தின் மூலமாகவோ, இரத்தம் சிந்துவதன் மூலமாகவோ நிறைவேற்றிக்கொள்ள இயலாது. சமாதானத்துக்கு உறவுக் கரம் நீட்டுவதன் மூலமும், விசுவாசமான, நியாயமான விதத்தில் அதிகாரப் பகிர்வு வழங்க இணங்குவதன் மூலமுமே விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கைவிடச்செய்ய இயலும் என நான் திடமாக நம்புகிறேன். ★

**தமிழில்: ராஜா**

## சர்வதேசத் தரப்புகளை விமர்சிப்பது வேண்டாத பிரதி பலன்களையே தரும்

---

## காட்டுநின் வேலினை!

பழைமை பேணிட பார்புகழ்ந் தேற்றிய
பன்னெடும் புகழ் பரப்பிய நல்லையில்
வழமை பேணியே வகுத்ததோர் மரபினை
வழுவ விட்டு நாம் வணங்குதல் முறைமையோ
அழகன் முருகனை அடியவர் தாங்கிட
ஆண்டு தோறும் அருள் பாலித்தவனல்லலோ?
களங்க மற்றதோர் கயிலை வாகனம்
கவின்நிறை வண்ணமா தேரதும் ஏறியே
அழப்பெரும் அடியவர்க்காசி நல்கிய அருள்நிறை
காட்சியை ஆரினிக் காண்பரோ?
உளமதும் கல்லதோ உருகவும் இல்லையோ?
உள்ளூர வீதிஉலா வருவதும் நீதியோ?
பழம்தனைப் பெற்றிட பச்சைமா மயில்மிசை
பவனி வந்ததும் பொய்யதோ? மெய்யதோ?
களங்க மற்றவேல் காத்திடும் வேலவா
கனிந்து வேண்டுறோம் காட்டுநின் வேலினை

'வினா கவி'

---

## தொண்டுள்ளம் கொண்ட தொன்மையுள்ள பெரியபுராணம்


சிதம்பரம் தமிழ்ப்பேரவை சார்பில் சேக்கிழார் செந்தமிழ்த் திரு விழாவின் நிறைவு விழா கடந்த மாதம் சிதம்பரத்தில் இடம்பெற்றது. தமிழ்க்காப்பணித் தலைவர் அழ.பழனியப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ பெரியபுராணம் குறித்து ஆற்றிய உரையின் சாரம் சம் இது.

தமிழுக்காகத் தொண்டாற்றுவதாக இன்று பலர் பேசுகிறார்கள். ஆனால், தமிழில் தேவாரம், திருவாசகம் பாட ஆலயக் கதவுகள் திறக்க மறுக்கிறார்கள். ஏன் அதைத் திறக் கக்கூடாது? குலோத்துங்க சோழ[illegible]னால் போற்றப்பட்டவர் சேக்கிழ[illegible] பெருமான். இவர் எழுதிய திருத்தொ[illegible]ர் புராணம் எனும் பெரியபுராணத்தில் தொண்டர்களான நாயன்மார்களைப் பற்றி உயர்வாகக் கூறியுள்ளார். நாயன்மார்கள் தமிழை உயி ராக நேசித்துள்ளார்கள். தமிழ் வளர, தமிழகம் வளர, தமிழன் வளர முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளனர்.

பெரியபுராணத்தைச் சேக்கிழாரைத் தவிர உலகத்தில் வேறு யாராலும் சிறப்பாக எழுதி இருக்கமுடியாது.

1943இல் மறைமலை அடிகள் சிதம்பரத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கும்போது சிலர் இராமாயணம் ஒழிக, பெரியபுராணம் ஒழிக எனக் கோஷமிட்டனர்.

அதற்கு மறைமலை அடிகள் இராமாயணம் வட இந்தியாவில் இயற்றியது. பெரிய புராணம் தமிழகத்தில் இயற்றப்பட்டது. எனவே பெரியபுராணம் ஒழிக என கோஷமிடா தீர்கள் என்றார்.



இதுகுறித்து மற்றொரு நிகழ்ச்சியில் பாரதிதாசனிடம் கருத்துக் கேட்டபோது, மறை மலை அடிகள் கூறிய கருத்தில் தவறு இல்லை. அத்தகைய தொன்மை வாய்ந்த தொண் டுள்ளம் கொண்டது பெரிய புராணம் என்றார்.

எனவே, இளைஞர்களும் பெரியபுராணத்தையும் தமிழையும் தமிழி[illegible]க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலனே எங்கள் நோக்கம்.

## உங்கள் பிள்ளை 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

இதோ!
அரிய சந்தர்ப்பம்
உங்கள் கணக்கு
மீதி இரட்டிப்பு



அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-
இரண்டாம் இடம் ரூபா 7,500/-
மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/- க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள்
அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

* உரிய விண்ணப்பப் படிவத்தை எமது இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

OgilvyAction


## இந்து சமய தீட்சை

வல்லை மாநகரின் கண் அருளாட்சி செய்துவரும் வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்ட பாணிக தேசிகர் (J.P) குருக்கள் ஐயா அவர்களும் (V ஆலயம்), சிவஸ்ரீ வே.பாலச் சந்திரிக் குருக்கள் ஐயா அவர்களும் (வேவில்) இணைந்து எதிர்வரும் ஆவணித்திங்கள் 27 ஆம் நாள் (15.09.2007) குருவாரம் வியாழன் காலை 6 மணி 28 நிமிடம் தொடக்கம் 8 மணி 15 நிமிடம் வரை உள்ள சுபவேளையில் இந்து சமயிகட்கு இந்து சமயதீட்சை (ஆரம்ப தீட்சை) வழங்க இறைவன் திருவருள் கைகூடி இருப்பதால் V தீட்க்ஷ பெறவிரும்பும் 7 வயதுக்கு மேற்பட்ட (ஜீவான்மாக்கள்) இந்து சமயிகள் கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெயர்களை முன்கூட்டிப் பதிவு செய்யவும். பதிவு செய்வதன் மூலம் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

*முகவரி:* சு.ஜெயகோபாலசாமி, பிருந்தா வாசம், செம்பாடு. பொலிகண்டி, வல்வெட்டித்துறை (மயூரி சோதிட ஆய்வகம்).
அறியத் தருபவர்: இந்து சமயப் பற்றுள்ள சு.ஜெயகோபாலசாமி.
(63264)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய Bahraha புறொயிலர் குஞ்சுகள் நாளை (13.08.2007) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

T.P.No. 222 2867, 222 3529
(63269)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1968 கார்த்திகை நட்சத்திரம் 13¾ கிரகபாவம் உடைய இங்கிலாந்தில் தொழில் புரியும் இஞ்சினியருக்கு (M.Sc Air Transport Engineering) டாக்டர் அல்லது கணக்காளர் (சீமா) தேவை. தொடர்பு ச.தியாகராசா அராலி மத்தி வட்டுக்கோட்டை.
(62684)

## விற்பனைக்கு

TVS Victor Glx 125, NPJY xxxx கறுப்பு நிறம் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு: 0716407421, அல்லது 07, அய்யனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை.
(63268)

## பயிர்களை அழித்துவந்த கட்டாக்காலி பிடிபட்டது

மானிப்பாய் மருதடி தோட்ட வெளிப்பகுதிகளில் பயிர்களை அழித்து வந்த கட்டாக்காலி மாடு ஒன்று பிடிகாரனால் பிடிக்கப்பட்டுள்ளது. கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்காக இவர்களை மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் நியமித்துள்ளது.

இப்பகுதி தோட்ட நிலங்களில் நிலக்கடலை, வல்லாரை, பொன்னாங்காணி போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றை இரவு நேரங்களில் கட்டாக்காலி மாடுகள் அழித்து வந்துள்ளன. அந்த மாடுகளில் ஒன்றே பிடிகாரினால் பிடிக்கப்பட்டுள்ளது. கட்டாக்காலிகளை இப்பகுதியில் தொடர்ந்து பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(203-135)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றும் **திருமதி சுந்தரமூர்த்தி சுதர்லா** அவர்களின் அன்புக் கணவர்

**தர்மலிங்கம் சுந்தரமூர்த்தி**

அவர்கள் 10.08.2007 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.
(63270)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக பிரதம எழுதுநர்
திருமதி இ.ரஞ்சலாதேவி அவர்களின் அன்புத் தாய்

**அமரர் இளையதம்பி பொன்னம்மா**

*அவர்களின் மறைவினையொட்டி துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
சங்கானை.

பிரதேச செயலரும்
உத்தியோகத்தர்களும்.
(63271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் தமிழ்ச் சிறுகதைத் துறையின் முன்னோடிகளாக, முதலாவது, இரண்டாவது தலைமுறை எழுத்தாளர்களின் படைப்புகளை உதயன் ஞாயிறு இதழ்களில் வெளியிட்டு வருகிறோம்.

அந்த வரிசையில் இரண்டாம் தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மாவின் மொழிபெயர்ப்புச் சிறுகதையானகவியரசர் தாகூரின் சிறுகதையை இங்கு வாசகர்களுக்குத் தருகிறோம்.

பண்டிதர் ச.பஞ்சாட்சாரசர்மா "மறுமலர்ச்சி" காலத்தவர். அந்தப் பத்திரிகையின் இணையாசிரியராக வரதரோடு சேர்ந்து பணிபுரிந்தவர். சிறுகதைகளோடு கவிதை, மொழிபெயர்ப்புக் கதைகள், கட்டுரைகளை நிறையவே எழுதியவர். பன்மொழிப் பாண்டித்தியம் பெற்றவர். ஆசிரியராகத் தொழில் புரிந்துகொண்டே கல்வித்துறைக்குப் பெரும் சேவை நல்கியவர்.

பண்டிதராக இருந்தபோதிலும், பழைமையில் பற்றுள்ளவராக இருந்தும் நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு - அதனை ஓர் இயக்கமாக வளர்ப்பதில் - உழைத்தவர் பஞ்சாட்சர சர்மா ஐயா அவர்கள்.



# படித்துறை சொன்ன பழங்கதை

பழைய கால நிகழ்ச்சிகளை அறிய ஆவலிருந்தால், என் மீது வந்திருந்து கொண்டு, சலசல எனப்பாயும் இந்த ஆறு சொல்வதைக் கேள்.

இன்னும் புரட்டாதி மாதம் பிறக்கவில்லை. ஆற்றில் நிறைய வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. கரையில் நான்கு படிகள் தவிர ஏனையவெல்லாம் நீரினுள் மூழ்கியிருந்தன. அதோ பார்! அங்கே நதி வளைந்து வளைந்து பாய்கிறதே. அந்தப் பக்கத்திலே இரண்டு, மூன்று செங்கற் சூளைகள் நீருக்குமேல் தலை நீட்டிக்கொண்டிருந்தன. ஆற்றங்கரை மரங்களில் தொடுத்திருந்த படகுகள், நீரோட்டத்தால் ஆடியசைந்து மிதந்து கொண்டிருந்தன. தழைத்து வளர்ந்த பசும் புற்கள் மீது பகலவனின் பொற்கிரணங்கள் தவழ்ந்து விளையாடின. செடிகளும் கொடிகளும் அப்போதுதான் மொட்டுக்கட்டியிருந்தன. மலர்கள் இன்னும் அலரத் தொடங்கவில்லை.

படகுகள் சில தங்கள் சிறிய பாய்களை விரித்துக்கொண்டு நதியில் நீந்திச் சென்றன. பிராமண சந்நியாசி ஒருவன் தன் தீர்த்த பாத்திரங்களுடன் குளிப்பதற்கு வந்தான். பெண்கள் தண்ணீர் கொண்டு செல்லக் கூட்டங்கூட்டமாய் வந்தார்கள். கல்யாணி வரும் நேரமாய்விட்டதென்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அன்று அவள் வரவில்லை. ஸ்வர்ணமும் புவனமுந்தான் வந்தார்கள். அவர்கள், தங்கள் தோழியை அவள் கணவனுடைய ஊருக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்களென்றும், அது முன்னொரு போதும் அறியப்பட்டிராத இடமென்றும் கூறி வருத்தப்பட்டுக் கொண்டு போனார்கள்.

சில நாள்கள் சென்றன. நானும் கல்யாணியை மறந்து விட்டேன். ஆற்றுக்கு வருபவர்கள் அவளைப் பற்றிப் பேசுவதேயில்லை. ஆனால், ஒருநாள் மாலை, எனக்கு மிகவும் பழக்கமான அந்தக் காலடியைக் கேட்டுத் திடுக்கிட்டேன். ஆம்! ஆமாம்! ஆனால் அக்கால்கள் முன் போலன்றி நகைகளற்று வறிதேயிருந்தன. அவற்றிற்கு முன்னிருந்த மினுமினுப்பும் மென்மையும் இப்போது எங்கு போயினவோ காணோம்.

கல்யாணி கைம்பெண்ணாகிவிட்டாள். அவள் கணவன் மிகு தொலைவிலுள்ள ஏதோ ஓரூரில் வேலையிலிருந்தவன். கல்யாணமான பின் கல்யாணி அவனை ஒருமுறையோ இருமுறையோதான் பார்த்திருக்கிறாள். கடிதமூலமாகத் தான் அவளுக்கு அவன் இறந்த செய்தி தெரியவந்தது. எட்டுவயதுக் கைம்பெண்ணான அவள், நெற்றியிலிருந்த குங்குமத்தை அழித்துவிட்டு கைகளிலிருந்த வளையல்களையும் கழற்றிவிட்டு, கங்கைக் கரையில் இருந்த தன் பழைய வீட்டிற்கே வந்துவிட்டாள். ஆனால், அவள் தன் பழைய தோழிகள் ஒருவரையும் சந்திக்கமுடியவில்லை. ஸ்வர்ணமும் புவனமும் கல்யாணம் செய்துகொண்டு தத்தம் புக்ககம் போய்விட்டார்கள். சரஸ்வதி ஒருத்திதான் இருந்தாள். அவளுக்கு தைமாதத்தில் கல்யாணம் என்று பேசிக்கொண்டார்கள்.

கல்யாணி இளமையிலும் அழகிலும் நாள்தோறும் வளர்ந்து வந்தாள். ஆனால், எளிமை வாய்ந்த அவள் உடை, துயர் நிறைந்த அவள் முகம், தளர்வடைந்த அவள் நடை ஆகிய இவையெல்லாம் சேர்ந்து அவளுடைய அழகையும் இளமையையும் மறைத்துப் போடப்பட்ட திரை போலாய்விட்டன. இவ்வாறு பத்து வருடங்கள் கழிந்து போயின. ஆனால் கல்யாணி இப்போது வளர்ந்துவிட்டாளென்று அறிவாரெவருமில்லை.

இன்று போலவே ஒருநாள் காலை, ஏதோ ஒரு வருடத்துப் புரட்டாதி மாத்தின் பிற்பகுதியில், உயரமான சிவந்த உடலமைந்த இளைஞனான ஒரு துறவி (அவன் எங்கிருந்து வந்தவனோ தெரியாது) எனக்கு முன்பிருக்கும் சிவன் கோவிலுக்கு வந்து சேர்ந்தான். அவன் வந்தது ஊரிலுள்ள எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. தங்கள் தங்கள் குடங்களை வைத்துவிட்டுப் பெண்களெல்லோரும் அந்தப் புதிய யோகியைத் தரிசிப்பதற்குக் கூட்டங்கூட்டமாய் வரத்தொடங்கினார்கள்.

நாளுக்கு நாள் கூட்டம் பெருகலாயிற்று. அந்தப் பால சன்னியாசியைப் பற்றிப் பெண்கள் வானளாவப் புகழ்ந்து கொண்டாடினர். அவன் ஒருநாளைக்குப் பாகவதத்திலிருந்து சுலோகங்களை எடுத்துக் கூறுவான். இன்னொரு நாளைக்குக் கீதையின் தத்துவார்த்தத்தை விளக்கிக் காட்டுவான். சிலர் அவனிடம் யோசனை கேட்கச் சென்றனர். சிலர் மாந்திரீக விஷயமாய் அவனைக் கலந்தனர். சிலர் தங்கள் நோய் தீர்க்க அவனை நாடினர்.

சில மாதங்கள் சென்றன. அது ஒரு சித்திரை மாதம். அன்று சூரியகிரகணம். அதற்காகப் பெருங்கூட்டம் கங்கையில் நீராட வந்திருந்தது. பலர் அச்சந்நியாசியைத் தரிசிக்க வந்தவர்கள். அவர்களுள் கல்யாணியின் கணவனது கிராமத்துப் பெண்களும் சிலர் வந்திருந்தார்கள்.

அப்போது காலை நேரம். என்னுடைய ஒரு படியில் வீற்றிருந்த சந்நியாசி, தன் துளசி மணிமாலையைக் கையில் வைத்து ஜெபம் செய்துகொண்டிருந்தான். அப்போது திடீரென்று ஒருத்தி தன் பக்கத்திலிருந்தவளை ஒரு கிள்ளுக் கிள்ளிவிட்டுச் சொன்னாள், 'என்ன, நம்முடைய கல்யாணியின் கணவனல்லவோ இவன்!''.

இன்னொருத்தி மெதுவாகத் தன் முக்காட்டை விலக்கி விட்டு ''ஓ! ஆமாம்!! எங்களூர்ச் சட்டாஜீயின் இளைய பிள்ளைதான்.''

வேறொருத்தி ''ஆ! அதே நெற்றி, அதே கண்கள், அதே மூக்கு.''

சந்நியாசியைத் திரும்பிப் பாராமலே நான்காவதொருத்தி ''பாவம் (கல்யாணியின் கணவன்) இறந்துவிட்டான். அவன் இனித் திரும்பிவரப் போவதில்லை. கல்யாணியின் துரதிஷ்டம்''

இன்னொருத்தி ; ''அவன் இவ்வளவு உயரமில்லை.''

மற்றொருத்தி; ''அதுவுமல்லாமல் அவன் இவ்வளவு ஒல்லியுமல்லவே'' என்று சொன்னாள். இவ்வளவில் அவர்கள் இவ் விஷயத்தை நிறுத்திக்கொண்டார்கள்.

ஒருநாள் மாலை. கீழ்த்திசையில் பூரண சந்திரன் தன் வெண்ணிலாவைப் பரப்பிக்கொண்டெழுந்தபோது, கல்யாணி என் கடைசிப் படியில் வந்துட்கார்ந்தாள். அவள் நிழல் என்மீது விழுந்திருந்தது.

அப்போது படித்துறையில் ஒருவருமில்லை. கிளிகள் ஆற்றங்கரை மரங்களில் அங்குமிங்கும் தத்திக்கொண்டிருந்தன. சிவன் கோவில் அசையாமணியோசையும் குறைந்துகுறைந்து மெதுவாகக் கேட்டு அடங்கிவிட்டது. செடி, கொடிகள் உள்ள இடங்களிலும், கோவில் மண்டபத்திற்கருகிலும் பாழடைந்த வீட்டின் பக்கத்திலும், குளக்கட்டின் கரையோரத்திலும், பக்கத்திலுள்ள பனங்காட்டிலும் நிழல்கள் கோலம் போட்டாற்போல் இருந்தன. அதோ அங்கு தெரிகிறதே. அந்த அரச மரத்தில் வெளவால்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அந்த வீட்டிற்கப்பால் நரிகள் ஊளையிடும் சப்தம் காற்றில் மிதந்துமிதந்து வந்தது.

சந்நியாசி மெதுவாகக் கோவிலிருந்து வெளியே வந்தான். இங்கு வந்து சில படிகள் இறங்கியவுடன் எவளோ ஒரு பெண் தனியாய் உட்கார்ந்திருப்பதைக் கண்டுவிட்டுத் திரும்பிப்போக அடியெடுத்தான். அப்போது கல்யாணி திடீரெனத் தலையை நிமிர்த்தித் தனக்குப் பின் திரும்பிப் பார்த்தாள். அவள் முக்காடு நழுவி விழ்ந்தது. நிலவொளி அவள் முகத்தில் பளிச்சென்று வீசிற்று.

அவர்களுக்குமேலாக ஆந்தையொன்று அலறிக்கொண்டு பறந்தது. அதைக்கேட்டுத் திடுக்கிட்டபின்தான் கல்யாணிக்குத் தன்னுணர்ச்சி வந்தது. மெல்லிய சல்லாத் துணியாலாகிய முக்காட்டைத் தலையில் இழுத்துவிட்டுக்கொண்டு சந்நியாசியை வணங்கினாள். சந்நியாசி அவளை ஆசீர்வதித்து ''யாரம்மா?'' என்று கேட்டான். அவள் சொன்னாள், ''என் பெயர் கல்யாணி''.

அன்றிரவு அவர்கள் இதைத்தவிர வேறொன்றும் பேசவில்லை. பக்கத்திலிருந்த தன் வீட்டிற்குக் கல்யாணி மெல்லப் போய்ச் சேர்ந்தாள். ஆனால், சந்நியாசி மாத்திரம் அன்றிரவு வெகுநேரம் என் படிமேல் உட்கார்ந்துகொண்டிருந்தான். நள்ளிரவுவரை அவ்வாறு இருந்துவிட்டுப் பின்னர் கோயிலுக்குள் சென்றுவிட்டான்.

அதன்பின்னர் கல்யாணி சந்நியாசியைத் தரிசிக்க நாள்தோறும் வருவாள். அவன் ஜனங்களுக்கு கீதை முதலியவற்றைப் படித்துக் காண்பிக்கும்போது அவள் ஒரு மூலையில் நின்று கேட்டுக்கொண்டிருப்பாள். காலையில் சந்நியாசி தன் ஜெபங்களெல்லாம் முடிந்த பின், அவளிடம் மதங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பான். அவள் அவற்றையெல்லாம் விளங்கிக் கொண்டிருக்கமாட்டாள். ஆயினும் அமைதியாயிருந்து கேட்டு அவற்றின் பொருளை விளங்கிக்கொள்ள முயன்றாள். அவனிடும் வேலைகளையெல்லாம் மிகப் பணிவோடு செய்து வந்தாள். எப்போதும் கோயிலைப் பெருக்குவதும் மெழுகுவதுமாகத் தெய்வத் திருப்பணி செய்துவந்தாள்.

பனிகாலம் முடிகின்ற சமயம். மிகக் குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. ஆயினும் இடையிடையே சில மாலை நேரங்களில் இன்பமான இளந்தென்றலும் மெல்லெனவீசும். எங்கோ மிகுந்த தொலைவிலிருந்து நாதஸ்வரத்தின் இனிய ராகம் தவழ்ந்து வரும். படகுக்காரர் தங்கள் படகுகளை நதியின் நீர்ப்போக்கிலேயே ஓட விட்டு, துடுப்புப் போடாமல் கண்ணபிரான் மீது காதற் பாட்டுகள் பாடிக்கொண்டு போவார்கள். இதுதான் அந்தக் காலம்.

திடீரெனக் கல்யாணியை நான் பார்க்கமுடியாது போய்விட்டது. சில நாள்களாக ஆற்றுக்காவது சந்நியாசியிடமாவது அல்லது கோவிலுக்காவது வருவதை அவள் நிறுத்திவிட்டாள். பின் என்ன நடந்ததென்று நானறியேன். ஆனால், ஒருநாள் மாலை இருவரும் என் படியில் வந்து சந்தித்தனர். கீழே குனிந்தபடியே கல்யாணி கேட்டாள், ''என்னைக் கூப்பிட்டு ஆளனுப்பினீர்களா?.''

''ஆமாம். ஏன் உன்னைச் சில நாள்களாகக் காணவில்லை? கடவுளுக்குப் பணி செய்வதிலும் உனக்குச் சலிப்பேற்பட்டுவிட்டதா?''

அவள் வாய் திறக்கவில்லை. மௌனமாக நின்றுகொண்டிருந்தாள்.

சந்நியாசி திரும்பவும் சொன்னான், ''உன் உள்ளத்திலுள்ளதையெல்லாம் ஒளியாமல் என்னிடம் சொல்.''

கல்யாணி முகத்தைத் திருப்பிக்கொண்டு ''நான் ஒரு பாவி, ஆகையினால்தான் தொண்டு செய்வதை நிறுத்திவிட்டேன்'', என்றாள்.

''கல்யாணி, உன் மனம் மிகக் குழம்பிபோயிருக்கிறதென்று எனக்குத் தெரியும்.''

இதைக் கேட்டதும் அவள் நெஞ்சந் திடுக்கிட்டாள். தன்சேலைத் தலைப்பால் முகத்தை மூடி, சந்நியாசியின் காலடியில் உட்கார்ந்து கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

சந்நியாசி கொஞ்சம் நகர்ந்து நின்று, ''உன் மனத்திலுள்ளதை என்னிடம் சொல் உன் மனம் சாந்தியடைய வழி சொல்கிறேன்'' என்று சொன்னான். அவள் ஏதோ தீர்மானங் கொண்டவள் போல் காணப்பட்டாள். சிறிது தட்டுத் தடுமாறிக்கொண்டு சொன்னாள். நீங்கள் என்னை உத்தரவிட்டால் நான் சொல்லத்தான் வேண்டும். ஆனால் அதை நான் வெளிப்படையாகச் சொல்லமுடியாது. எல்லாவற்றையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். நான் ஒருவரைக் கடவுளாக மதித்தேன். தொழுதேன். அதனால் என்னுள்ளம் விரிவடைந்தது. ஆனால் ஒருநாள் இரவு எங்கோ ஒரு பூங்காவுள் அவர், என் வலது கையைத் தனது இடது கையாற் பற்றிக்கொண்டு என்னருகிலிருந்து என்னிடம் காதல் மொழிகள் பேசுவதாகக் கனவு கண்டேன். அப்போது எனக்கு அது சிறிதும் வியப்பாகத் தோற்றவில்லை. இவ்வளவில் கனவு மறைந்து விட்டது. மறுநாள் அவரை நான் கண்டபோது அவர் எனக்கு வேறு விதமாகத் தோற்றினார். கனவில் கண்டவை என்னை நீங்காது பற்றிக்கொண்டன. அச்சத்தால் அவ்விடம் விட்டு விலகி ஓடிப்போனேன். ஆயினும் கனவில் கண்டவை என்னை விட்டகலவில்லை. இதனால்தான் என் மனது கலக்கமடைந்தது. எனக்கு இவ்வுலகம் முழுவதுமே இருட்டாகத் தோன்றுகிறது.''

இவ்வாறு கூறி அவள் தன் கண்ணீரைத் துடைத்துக்கொள்ளும் போது, அச்சந்நியாசி என் படிக்கல்லின்மீது தன் வலக்காலை மிக அழுத்தமாக ஊன்றிக்கொண்டிருந்தான். அவள்கூறி முடித்ததும் அவன், ''நீ கனவில் கண்ட மனிதன் யார் என்று கூறவேண்டும்'' என்றான். அவள் தன் கைகளைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டே, ''நான் சொல்வதற்கு முடியாமலிருக்கிறேன்'' என்றாள்.

''இல்லை நீ சொல்லித்தானாகவேண்டும்.''

அவள் கையைப் பிசைந்துகொண்டே, ''நான் சொல்லித்தானாக வேண்டுமா?''

''ஆமாம்''

''என் கனவில் தோன்றியவர் நீங்கள்தான்''

இவ்வாறு கூறிவிட்டு என் படிமீது வீழ்ந்து விம்மி விம்மி அழுதாள்.

பின்னர் அவள் ஒருவாறு தன்னிறைவு பெற்று எழுந்திருந்த போது சந்நியாசி மெதுவாகச் சொன்னான், ''நான் இவ்வுலகத்தைத் துறந்துவிட்ட சந்நியாசி. நீ என்னைப் பாராதிருத்தற்காக இன்றிரவே இவ்வூரைவிட்டுச் செல்கிறேன். இனி நீ என்னை முடிவாக மறந்துவிடவேண்டும்''. கல்யாணி மிகத் தாழ்ந்த குரலில் வேதனையுடன் ''அப்படியே ஆகட்டும்'' என்று பதிலளித்தாள். ''நான் விடைபெறுகின்றேன்'' என்று அவன் புறப்பட்டான். கல்யாணி ஒன்றும் பேசாது அவனை வணங்கிக் கால்களைக் கண்ணிலொற்றிக் கொண்டாள். பின் அவன் அவ்விடத்தை விட்டுச் சென்று மறைந்தான்.

சந்திரன் மறைந்தது. இரவு மிகவும் இருட்டாகியது. ஆற்று வெள்ளத்தில் ஏதோ 'தொப்' பென்று விழுந்த சத்தத்தைக் கேட்டேன்!

வானவெளியிலுள்ள நட்சத்திர மண்டலங்களையெல்லாம் பொடிப் பொடியாக்க எண்ணங்கொண்டதுபோல் காற்றுச் சீறிக் கொண்டு சென்றது. ★

# உதயன் மக்கள் மன்றத்துக்கு திணைக்கள உதவி ஆணையாளர் பதில்

*கடந்த 5ஆம் திகதி உதயன் இதழ் மக்கள் மன்றத்தில் ''காலபோக நெற்செய்கைக்கு மானிய உர விநி யோகம் சென்ற ஆண்டில் நடந்த கதையாகவே தொடருமா?'' என்ற தலைப்பில் 'கமக்காரன்' எழுதியிருந்த கட்டுரைக்கு யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் விளக்கம் அளித்து கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் விவரம் இங்கு தரப்படுகிறது.*

மக்கள் மன்றத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக திணைக்கள உதவி ஆணையாளர் என்ற வகையில் அவற்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

செய்கை பண்ணப்படாத எந்த நிலங்களுக்கும் திணைக்களத்தின் ஊடாக வழங்கப்படும் உதவிகள் எவையும் வழங்கப்படமுடியாது. கட்டுரையில் குறிப்பிட்டது போன்று தனங்கிளப்பு, மறவன்புலவு பகுதிகளில் செய்கை பண்ணப்படாத நிலையில் அவர்களுக்குரிய உதவிகள் எவையும் வழங்கமுடியாது என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

## செய்கை பண்ணப்படாத நிலங்களுக்கு மானியத்தில் உரம் வழங்கமுடியாது

கடந்த ஆண்டில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருந்த காணிகளின் விவரங்கள் முற்கூட்டியே அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டு புள்ளிவிவரங்கள் பெறப்பட்டு அவற்றின் அடிப்படையில் அன்றையப் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்தநிலையிலும் 600Mt உர வகைகள் பல்வேறுபட்ட சிரமத்தின் மத்தியில் அரச அதிபரின் உதவியுடன் திணைக்களத்தின் மூலம் மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

### பகிர்ந்து வழங்கப்பட்டது

முற்கூட்டியே பதிவை மேற்கொண்ட விவசாயிகளுக்கும் அதேவேளை மாவட்டத்தின் அன்றைய நிலை கருத்தில் எடுக்கப்பட்டு பதிவுகளை மேற்கொள்ளாதிருந்து இறுதி நேரத்தில் விண்ணப்பித்த விவசாயிகளுக்குமாக மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபட்ட சகல விவசாயிகளுக்கும் மானிய உரம் கிடைக்கக்கூடியவாறு பரப்புக்கு 1.5Kg வீதம் பகிர்ந்து வழங்கப்பட்டது. நெற்செய்கையை மேற்கொண்ட எந்தவொரு விவசாயியும் இத்திட்டத்தின் கீழ் உரம் பெறமுடியாமல் இருந்த நிலைப்பாடு மாவட்டத்தில் இருக்கவில்லை என்பதை தெளிவுடன் தெரியப்படுத்த விரும்புகிறேன். மேலும் நெற்செய்கை மேற்கொள்ளாதவர்களுக்கு வழங்கப்பட்டதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாகவே நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கட்டுரையில் குறிப்பிட்டது போன்று நெற்செய்கை செய்யாதவர்களுக்கு இவ்வுரம் வழங்கப்பட்டதாக கைதடியில் இருந்து எதுவித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை.

### முற்றுமுழுதாகத் தவறான கருத்து

மேலும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்காக கொண்டுவரப்பட்ட உரத்தின் விலை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் முற்றுமுழுதாக தவறானது என்பதுடன், கொழும்பில் 50Kg நிறை கொண்ட யூரியாப் பொதி ஒன்றின் விலை ரூபா 2600/- என்பதுடன் அவற்றை மாவட்டத்திற்கு கொண்டு வருவதற்குரிய கப்பல் கூலி, ஏற்றி இறக்கல் செலவு, லொறிக் கூலி, நிறையில் ஏற்படும் சோர்வு, வங்கி மேலதிகப்பற்று, நிலைய ஊழியர்களின் சேவைக் கட்டணம் என்பவை மாத்திரம் உள்ளடக்கிய விலையாக பொதி ஒன்று ரூபா 3450/- இற்கு அரச அதிபரின் ஆலோசனையுடனும் அனுமதியுடனும் திணைக்களத்தால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இந்த உர விலையில் வேறு செலவுகள் எனக் குறிப்பிட்ட எவ்வித செலவும் உள்ளடக்கப்படவும் இல்லை கொள்ளை இலாபம் வைத்து விற்பனை செய்யப்படவும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவிப்பதுடன் இவ் நடைமுறையே கமநல சேவைகள் நிலையங்கள்

(06ஆம் பக்கம் பார்க்க)

# தந்தைக்குப் பிதிர்க்கடன் ஆற்றும் ஆடி அமாவாசை விரதநாள் இன்று

ஆடி மாதத்தில் வருகின்ற ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை என்பனவற்றை விட ஆடி அமாவாசை மிக விசேடமான ஒரு புனித நன்னாளாகும்.

ஏனெனில் மானிடப் பிறப்பெய்தி மறைந்த ஆத்மாக்களின் - முக்கியமாகக் குடும்பத்தில் முதலிடம் வகித்துத் தந்தை, தாயாக வாழ்ந்த பிதிர்களுக்குப் பிரீதி செய்து வணங்கி வழிபாடு இயற்றிப் பிதிர்க்கடன் செலுத்துகின்ற நாள்தான் ஆடி அமாவாசை.

இவ்வுலக வாழ்வை எமக்களித்த அன்னையும் பிதாவும் எமது தெய்வங்கள். அவர்கள் பூலோக வாழ்வை முடித்து தேகவியோகம் அடைந்துவிட்டால் அவர்களது பிதிர்களுக்குப் பிரீதி செய்யவேண்டியது பிள்ளைகளின் தலையாய கடனாகும். ஆடி அமாவாசையான இன்றைய புனித நன்னாளில் எள்ளுந் தண்ணீரும் இறைத்து பிதிர்க்கடன் செலுத்தவேண்டும்.

'அமா' என்பது ஓரிடத்திற் பொருந்தியது; குவிந்தது; அடுத்தது என்று பொருள்படும். சூரியனும் சந்திரனும் ஓர் இராசியிற் சஞ்சரித்து உறவாடும் நாள்தான் அமாவாசை. இந்த உலகம் இயங்குவதற்கு சூரியபகவானே மூலகர்த்தா. உலக இன்பத்துக்கும் பூரண மகிழ்ச்சிக்கும் தெளிந்த அறிவுக்கும் சந்திரனே மூலகாரணர். எனவே இவற்றைப் பெறுதற்கு அமாவாசை விரதம் அனுட்டிக்கவேண்டும்.

எம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கி உலகில் பெருமையுடன் வாழச் செய்த தந்தையாரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டுமாயின் பிதிர்க்கடன் செலுத்தியே ஆகவேண்டும். தந்தையின் கடன் செலுத்தும் நாளாக நம் முன்னோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆடி அமாவாசை சைவ சமயிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு புனித நாள். பிதிர்க்கடன் செய்யாதுவிட்டால் நாம் சந்தோஷமாக வாழமுடியாது. இறந்துபோன எமது அன்புக்குரிய தந்தையாரை நினைந்து அவரது பெயர், நட்சத்திரம் சொல்லி அந்தணர் மூலம் எள்ளுந் தண்ணீரும் தர்ப்பையில் இறைத்து தான தர்மம் செய்துகொள்ள வேண்டும்.

அன்னாரது ஆத்மாவுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே இது செய்யப்படுகின்றது.

அறுசுவை உணவு படைத்துக் காகத்துக்கு முதலில் வைத்த அது சாப்பிட்ட பின்னரே விரதகாரர் உணவுண்ணல் வேண்டும். இதில் காத்தோட்டிக் காய்ப் பொரியல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது தொன்றுதொட்டு நிலவி வருகின்ற ஒரு வழக்கமாகக் கருதப்படுகின்றது. காரணம் சரிவரத் தெரியவில்லை.

இந்த ஆடி அமாவாசை நாளில் கீரிமலை, வில்லூன்றி முதலான புனித தீர்த்தங்களில் நீராடி தந்தையின் ஆவியை, ஆன்மாவை எண்ணித் தர்ப்பணஞ் செய்து புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். எமது வாழ்விலே தந்தையின் ஸ்தானம் மிகச் சிறந்தது. 'தந்தையோடு கல்வி போம்' என்பது முன்னோர் வாக்கு. ஆகவே, ஆடி அமாவாசை விரதம் காத்துப் பிதிர்க்கடன் செய்யாது விடுதல் எங்களுக்குப் பாவங்களைத் தேடித் தரும்.

இந்தப் பாவத்திலிருந்து விடுபட, ஆத்மா சாந்தி அடைய, பிதிர் திருப்தி பெற ஆடி அமாவாசையை அனுசரித்து விரதமிருக்க வேண்டும். இந்தக் கடன் எல்லோரும் மனம்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் ஒருநாளைத் தந்தைக்கென ஒதுக்கி நமக்காகவே வாழ்ந்து நமது முன்னேற்றத்திற்கு தன்னையே அர்ப்பணித்துச் செயற்பட்ட அன்புத் தந்தையை நினைந்து - அவரது பிதிர் அமைதி பெற்றுக்கொள்ள - ஆன்ம ஈடேற்றம் காண ஆடி அமாவாசை விரதத்தை அனுட்டித்து நல்வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

- இராசையா ரந்தரன்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து






கனடாவில் வசிக்கும் கிரிதரன்-கிருஷா தம்பதியரின்

**செல்வப் புதல்வி காவியா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (12.08.2007) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா நிலவன், இலங்கையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, இந்தியாவில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, பூட்டி, ஜேர்மனியில் வசிக்கும் சித்தப்பா, சித்தி, லண்டனில் உள்ள மாமா, மாமி, இலங்கையில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, தங்கைகள் அபிநயா, ஆராதனா, பாக்கியநாதன் குடும்பம், இந்தியாவில் உள்ள பத்மநாதன் குடும்பம், ஜேர்மனியில் உள்ள தவராசா குடும்பம், கனடாவில் உள்ள லோகேஸ்வரன் குடும்பம், நுவரெலியாவில் இருக்கும் கோபிநாத் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பனை வீரபத் திரரின் துணையுடன் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கண்ணன் ஸ்ரோர்ஸ்,
வீரபத்திரர் கோயிலடி,
கோப்பாய் தெற்கு, (63494).

தகவல்:
அப்பப்பா,
அப்பம்மா.

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் ஆடி மாதம் 28ஆம் நாள் (13.08.2007) திங்கட்கிழமை பகல் 9.30 மணிமுதல் 10.21 மணி வரையுள்ள சித்தயோகமும் கன்னி இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரி திருநிறை செல்வி

## உஷாஜிகா

அவர்களுக்கு இறையருள் துணைகொண்டு பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி.ந.கோவிந்தராசா
குடும்பத்தினர்.
T.P.: 021 2223432,
021 2225184.

64, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(63256)

# மக்கள் மன்றத்துக்கு...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாக விற்பனை செய்யப்படும் சகல விவசாய உள்ளீடுகளுக்கும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நடைமுறைகள் சேவை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதேயொழிய இலாப நோக்கில் அல்ல என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

**நேரடி முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை**

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட சில பகுதி விவசாயிகள் புறக்கணிக்கப்படுவதும் பாரபட்சம் காட்டப் படுவதுமாக தெரிவிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக எதுவித நேரடி முறைப்பாடுகளும் எனது கவனத்திற்கு கிடைக்கவில்லை என்பதுடன், அவ்வாறான பாகுபாடு எந்தவிதத்திலும் அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் இது தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்களை வழங்குகின்ற பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரியப்படுத்துகின்றேன். எவ்வாறாயினும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக கவனத்தில் எடுக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன். ✱

# 17ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
05 - 11 - 1917



உதிர்வு
18 - 07 - 1990

**அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு**

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம், எரிபொருள் நிலையம்)

திதி: 12.08.2007

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள்பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நல்லூர். (63251) (62530)

## விற்பனைக்கு

ராணி வீதி, நல்லூரில் உள்ள 2¼ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜி, 53/3, ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (62684)

## விற்பனைக்கு

வர்ண தொலைக்காட்சிப் பெட்டி (சோனி - 25"), சொனி DVD - MB3 பிளேயர் (3500 w - 5 way Specker), டிஸ்க் என்டனா (யூரோஸ்டார்) போன்ற பொருள்கள் உடன் விற்பனைக்கு. தொடர்பு: 588/4, நாவலர் வீதி, (கனகரத்தினம் ம.ம.வி முன்பாக) யாழ்ப்பாணம்.T.P. 222 9700 (62684)

## தையல் பயிற்சியகம்

குழந்தைகள் பெண்களுக்கான அனைத்து வகையான ஆடைகள் எம்ரொயிடிஸ் வேலைகள் அனைத்தும் 3 மாதத்திற்கு துரிதமாக பயிற்சி அளிக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

No.2, விதானையார் வீதி,
கொழும்புத்துறை.
T.P. 0776268329 (63402)

## ரெய்கி யோக வைத்தியம்
### (இயற்கை வைத்தியம்)

✱ கை, கால், தலைவிறைப்பு ✱ வாதம், மூட்டு வலி, தசைப்பிடிப்பு ✱ மூட்டுக்கள், தேய்மானம் ✱ நீண்டநாள் நித்திரை இல்லாமை ✱ கைகால் நடுக்கம், கழுத்துப் பிடிப்பு, இடுப்பு வலி ✱ சிக்குன்குனியா விக்கம், வலி, இழுப்பு ✱ மூச்சுத்திணறல் மற்றும் பழைய நோக்கள் உள்ளவர்களும், மருந்துகள் பயனளிக்காதவர்களும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

✱ இந்தியாவில் படித்தது குறிப்பிடத்தக்கது
கடிதம் மூலமும் தொடர்பு கொள்ளலாம்.
'ஆலோசனை இலவசம்'

(62985)

'யோக மருத்துவம்'
சாரையடி, பருத்தித்துறை.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி காசிப்பிள்ளை சின்னம்மா**

அன்னை மடியில் 02.05.1935 | அம்மன் திருப்பாதத்தில் 03.08.1997



*அம்மா உன் பிரிவுத் துயரால்*
*ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்தாலும்*
*உங்கள் அன்பு முகம் மறந்திடுமா? மறைந்திடுமோ?*
*ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்- உங்கள்*
*நினைவலைகள் நெஞ்சை விட்டு நீங்காதே- அம்மா!*
*அன்பால் எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!*
*அன்பு முகம் பார்த்தே படுத்துறங்கிப் பழகியே நாம்*
*இப்போது தூக்கமின்றித் துடியாய்த் துடிக்கின்றோம்*
*எத்தனை யுகங்கள் மலரட்டும்- எம்*
*நெஞ்சமதில் உங்கள் ஞாபகம் நிலைத்திருக்கும்!*
*உங்கள் நினைவுகள் என்றும் சுகமானவையே!*

உங்கள் ஆத்மசாந்திக்காக

இந்த ஆடி அமாவாசை நன்நாளில் வட்டுவினிப் பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினி கண்ணகையம்மன், இணுவில் கந்தன் துணைவேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**பொ.காசிப்பிள்ளை** *(கணவர்)*,
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், தம்பிமார்,**
**மைத்துனர்மார் மற்றும்**
**உற்றார், உறவினர்கள்.**

**பொன்னப்பாபதி, வட்டுவினி லேன்,**
**இணுவில் மேற்கு.** (சி.53223)

# நன்றி நவிலல்

மலர்வு
05 - 01 - 1915



உதிர்வு
29 - 07 - 2007

**Dr.A.V. இராசரத்தினம்**

(யாழ். சித்த ஆயுர்வேதக் கல்லூரியின்
முன்னாள் விரிவுரையாளரும் அதிபரும்)

*ஆதியாகி அந்தமாகி நின்றாய் - எங்கள்*
*பாசமாகி பந்தமாகி நின்றாய்*
*எங்கள் நினைவுமாகி நின்றாய்*
*தெய்வமே ஆகிவிட்ட*
*செல்வமே எங்கள் - அப்பு*
*உங்களை நினைத்து உருகுகின்றோம்*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.*

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது தந்தை 29.07.2007 அன்று அமரத்துவம் அடைந்த செய்தியைக் கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், யாழ்.சித்த ஆயுர்வேத கல்லூரியின் நிர்வாகிகள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


24/ 10, 59 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை. T.P 4935003

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கிரிக்கெட் சபைக்கு போட்டியாக உருவெடுத்துள்ள இந்தியன் கிரிக்கெட் லீக்!

இந்தியக்கிரிக்கெட் லீக்குடன் கை கோர்க்கும் வீரர்களுக்கு சலுகைகள் எதுவும் அளிக்கப்படமாட்டாது என இந்தியக்கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.


சரத்பவார்

இந்திய கிரிக்கெட் சபைக்கு சவாலாக ஜீ 'நுவி' சார்பில் இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய பொறுப்புகளில் ஜாம்பவான் கபில்தேவ், உள்ளிட்ட பலர் இடம்பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர்த்து சமீபத்தில் ஓய்வுபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் வீரர் லாரா கிரிக்கெட் லீக்கில இணைந்துள்ளார். ஆண்டுக்கு 2 கோடி ரூபா வரை வீரர்களுக்கு சம்பளம் வழங்க கிரிக்கெட் லீக் முன்வந்துள்ளதால், முன்னணி வீரர்கள் பலர் இவ்வமைப்பில் இணைய ஆர்வம் காட் வருகின்றனர்.

கிரிக்கெட் சபைத் தலைவர் சரத் பவார் அளித்த பேட்டியில், கிரிக்கெட் வீரருக்கும் எமக்கும் இடையில் மோதல் எதுவும் கிடையாது. மற்ற அமைப்பில் சேர்ந்தால் ஆயுட்காலத் தடை விதிக்கப்படும் என்று அறிவிக்கவில்லை. அவ்வாறு சேருபவர்கள் கிரிக்கெட்சபையிடம் இருந்து எவ்வித உதவியோ, ஆதாயமோ பெற முடியாது -என்றார்.


இதன் மூலம் ஆயுட்காலத் தடை என்ற நிலையிலிருந்து, உதவ முடியாது என்ற நிலைக்கு கிரிக்கெட்சபை இறங்கி வந்திருப்பதாகத் தெரிகிறது.

உலகின் பணக்கார அமைப்புக்களுள் ஒன்றான இந்திய கிரிக்கெட் சபைக்கு போட்டியாக, ஜீ 'ரி.வி' சார்பில் இந்தியன் கிரிக்கெட் லீக் என்ற அமைப்பு தொடக்கப்பட்டுள்ளது. இதில் கபில்தேவ், கிரண் மோரே, மதன்லால், சந்தீப்பாட்டீல், பல்விந்தர் சிங் சாந்த உள்ளிட்ட முன்னாள் வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் டீன் ஜோன்ஸ், இங்கிலாந்தின் டோனி கிரெக் போன்ற பிரபலங்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தியன் கிரிக்கெட் லீக் சார்பில் 45 நாள்கள் கொண்ட முதல் 'ருவென்ரி-20' தொடர் வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இப்படி அதிரடியான திட்டங்களுடன் கிரிக்கெட் லீக் களமிறங்க, இந்திய கிரிக்கெட் சபை சுதாரித்துக் கொண்டது. லீக் பக்கம் சேரும் வீரர்களுக்கு ஆயுட்கால தடை விதிக்கப்படும் என எச்சரித்தது. இதற்கு லீக் தரப்பில் இருந்து சரியான பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஜீ 'ரிவி' தலைவர் சுபாஷ் சந்திரா கூறுகையில்,' வீரர்களை அச்சுறுத்த சபைக்கு அதிகாரம் இல்லை. தனியார் அமைப்பு என்பதால் தடைவிதிக்கும் உரிமையும் கிடையாது. லீக் விரைவில் நிஜமாகும். எங்களது போட்டிகளை காண ரசிகர்கள் நிச்சயம் வருவார்கள்-' என்றார்.

கிரிக்கெட் சபையின் நடவடிக்கைக்கு கபில்தேவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இவர் கூறியது: நாட்டு மக்கள் கிரிக்கெட் மீது ஆர்வமாக இருக்கிறார்கள். ஆனால், கிரிக்கெட் சபை மட்டும் வீரர்களை அச்சுறுத்துவது ஏமாற்றம் அளிக்கிறது.


கபில்தேவ்

தடை விதிக்கப்படும் என்று கிரிக்கெட் சபைச் செயலர் நிரஞ்சன் ஷா எச்சரித்திருப்பது சரியல்ல. இது இவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. இவர் மீது நிறைய மதிப்பு வைத்திருக்கிறோம். அப்படியிருக்கையில் வீரர்களைத் தேவையில்லாமல் அச்சுறுத்தினால், அவர்கள் வெற்றி பெறும் நோக்கில் விளையாட மாட்டார்கள்; போராடவும் மாட்டார்கள்.

கிரிக்கெட் லீக் அமைப்பில் உள்ள பெரும்பாலானவர்கள் மூத்த வீரர்கள் என்று கேலி செய்வது தவறு. லாரா, ஜெயசூர்யா போன்றவர்களின் கிரிக்கெட் வாழ்க்கை இன்னும் முடிந்துவிடவில்லை. இவர்களிடம் இருந்து இளம் வீரர்கள் நிறையக் கற்றுக்கொள்ளலாம் என்றார்.

அறிமுக 'ருவென்ரி-20' உலக கிண்ணத்துக்கான இந்திய அணியின் தலைவராக மகேந்திர சிங் டோனி நியமிக்கப்பட்டுள்ளார். சேவக், இர்பான் பதான், ஹர்பஜன் ஆகியோர் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளனர். மிகவும் எதிர் பார்க்கப்பட்ட சுரேஷ் ரெய்னா, முகமது கைப் ஆகியோர் மீண்டும்ஒருமுறைபுறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் முதல் 'ருவென்ரி-20' உலக



இந்தியஅணி வருமாறு:-

மகேந்திரசிங் டோனி (அணித்தலைவர்), யுவராஜ் சிங் (துணைத்தலைவர்), சேவக், தினேஷ் கார்த்திக், ராபின் உத்தப்பா, கௌதம் காம்பிர், இர்பான் பதான், யூசுப் பதான், ஜோகிந்தர் சர்மா, அகார்கர், ஆர்.பி.சிங், ஸ்ரீசாந்த், ரோகித் சர்மா, பியுஸ் சாவ்லா, ஹர்பஜன் சிங்.

குறுகிய காலத்தில் தனது அபார ஆட்டத்தினால் அணித்தலைவர் பதவி வரை உயர்ந்துள்ளார் மகேந்திர சிங் டோனி. கடந்த 2004 ஆம் ஆண்டு வங்களாதேஷ்க்கு எதிரான ஒரு நாள் தொடரில் அறிமுக வீரராகக் கள

## 'ருவென்ரி-20' இந்திய அணிக்கு மகேந்திர சிங் டோனி தலைவர்

கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது.

இந்திய அணியின் முன்னணி வீரர்களான சச்சின், அணித்தலைவர் டிராவிட், கங்குலி ஆகியோர் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் தேர்விலிருந்து தாமாகவே முன்வந்து விலகினர்.

இந்த சூழலில் கிரிக்கெட் காப்பாளரும் அதிரடி ஆட்டக்காரருமான மகேந்திர சிங் டோனி அணித்தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். யுவராஜ் சிங்கிற்கு துணைத் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மோசமான நிலைமை காரணமாக இங்கிலாந்து, தொடரில் புறக்கணிக்கப்பட்ட சேவக், ஹர்பஜன் இருவரும் 'ருவென்ரி -20' உலக கிண்ணத்தில் தங்களது இடத்தை உறுதி செய்துள்ளனர். கடந்த 7 மாதமாக அணியில் வாய்ப்பு கிடைக்காமல் தவித்து வந்த சகலதுறை வீரர் இர்பான் பதானுக்கு இந்த முறை இடம் கிடைத்துள்ளது.

இளம் வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தேர்வு செய்யப்பட்டுள்ள 'ருவென்ரி-20' அணியில், அறிமுக வீரராக இர்பான் பதானின் சகோதரர் சகலதுறை வீரர் யூசுப் பதான் இடம்பெற்றுள்ளார்.

'ருவென்ரி-20' உலகக்கிண்ணத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட

மிறங்கிய தோனி, இது வரை 76 ஒரு நாள் போட்டிகளில் 3 சதம், 13 அரை சதங்கள் உட்பட 2302 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

தவிர, 200 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு எதிராக ஜெய்ப்பூரில் நடந்த போட்டியில், 183 ஓட்டங்கள் குவித்து அதிக ஓட்டங்கள் குவித்த விக்கெட் காப்பாளர் என்ற உலக சாதனையும் படைத்துள்ளார். சமீபத்தில் அயர்லாந்தில் நடைபெற்ற ஒரு நாள் தொடரில் துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட டோனி, தற்போது 'ருவென்ரி-20' உலகக்கிண்ணத்தில் அணித்தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது சிறப்பான

டிலான்

ஆட்டமும், தலைவர் டிராவிட் மற்றும் தேர்வுக் குழுவின் நம்பிக்கையும் கை கொடுக்க, இவரை விட அனுபவம் வாய்ந்த யுவராஜ் சிங்கை பின்னுக்குத் தள்ளி தலைவர் பொறுப்பை பெற்றுள்ளார். இது வரை 175 ஒரு நாள் போட்டிகள் விளையாடி, சிறந்த நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர் என்ற பெருமை பெற்றாலும், யுவராஜ் சிங்கால் துணைத்தலைவர் பதவி மட்டுமே பெறமுடிந்தது. *

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(05.08.2007-11.08.2007 வரையுள்ள)

சோதிடர் சன்

## மேடம்

உங்களுக்கு இந்தவாரம் உங்கள் இராசிக்கு 5ஆம் வீடான சிங்கராசியில் சனி, சுக்கிரன், புதன் கூடியிருக்க அதை செவ்வாயும் பார்ப்பதால் ஆள் வைத்துத் தொழில் செய்வோர் தொழிலால் நட்டமும், தொழிலாளர்களின் பகைமையை சம்பாதிக்கவும் இடமுண்டு. சிலருக்கு இருதயம் அல்லது வயிற்றுடன் கூடிய சுகயீனங்களும் சிகிச்சையும் ஏற்படும் பலன் உண்டு. கர்ப்பிணித்தாய்மார்களுக்கு குழந்தைப்பேறுக்குரிய காலமானால் மிக அவதானம் பேணவேண்டும். மேலும் குடும்பஸ்தர்களுக்கு புத்திரரால் கவலையும், உத்தியோகஸ்தர்களுக்குத் தொழில் செய்யுமிடத்தில் பகைமை, கஷ்டமும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி குழப்பத்தைத்தரும் வாரமாகும். மொத்தத்தில் சமபலன்தரும் வாரமாகும் சூரியன், சனிபகவானுக்கு பிரீதிசெய்து வழிபடவும்.

## இடபம்

உங்களுக்கு இந்தவாரம் சனிபகவான் புதனுடன் கூடி 4ஆம் வீடான சிங்கராசியில் இருப்பதனை செவ்வாயும் பார்ப்பதால், உங்களுக்கு வரக்கூடிய வாகனம், பூமி, கால்நடை, மனை என்ற நான்குவகைச் செல்வங்களிலும் ஆட்டம் கண்டாலும் தீரும் வாரமாகும். மேலும் சிலருக்குத்தாய், தாய்வழியால் வரக்கூடிய கஷ்டங்களும் குடும்ப ரீதியாக ஆதனம், சீதனம் போன்றவற்றால் பிரச்சினைகளும் வந்து சேரலாம். எது எப்படியாயினும் குருபகவான் களஸ்திர சுகஸ்தானத்திலிருப்பதாலும் குருபார்ப்பதாலும் கோடிபாவம் தீரும். கண்ணில் வரவேண்டியது புருவத்துடன் போனது போன்ற பலனாகும். குடும்பஸ்தர்களுக்கு குடும்ப சுகமுண்டு. மாணவர்களுக்கு கல்வி நிலை கெடும். பொதுவாக இந்த வாரம் சுமாரான பலன்களையே தரும் வாரமாகும்.

## மிதுனம்

உங்களுக்கு இந்தவாரம் மகாபாரத யுத்தத்தில் துரியோதனன் படை, பலம் இழந்த நிலை போன்ற பலனாகும். இது சகோதரபகை மற்றும் சகோதரவழியால் வரக்கூடிய பந்தபாசம் நீங்கிய நிலையாகும். குடும்பஸ்தர்களுக்கு குழப்பம் நிறைந்தவாரம். சிலருக்கு காதுவருத்தமும் சிகிச்சையும் ஏற்படுவதுடன் சகோதரர்களால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் கவலைதரும். ஏழரைச்சனிபகவான் விட்டுவிலகினாலும் வியாழ சுகமில்லாத நிலையில் கஷ்டங்கள் வரஇடமுண்டு. தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களுக்கு சமபலனுண்டு. தனித்தொழில் நன்மைதரும். புதிய முதலீடுகள் அதிக லாபம்தர இடமில்லை எனலாம். மாணவர்களுக்குக் கல்விநிலை மனநிறைவைத் தராது. தாய்வழி உறவுகள் நல் மை தரும். பொதுவாக இந்தவாரம் சுமாரான நன்மைதரும் வாரமாகும்.

## கடகம்

இந்தவாரம் உங்களுக்கு ஏழரைச்சனிபகவான் உங்களது இராசியைவிட்டு விலகிய வாரமாகும். மேலும் குடும்பரீதியாகச் சிலருக்கு கணவர், மனைவி வழி உறவுகளால் பிரச்சினைகள் வந்து தீரலாம். சிலருக்கு காது, தொண்டை சம்பந்தப்பட்ட சிகிச்சை பெறவும் பலனுண்டு. இதுவரை தாய் மற்றும் தாய்வழிக்கு வந்த துன்பங்கள் அற்றுப்போகும். பணவரவுவாய் நன்மைதரும். கடல்கடந்த நாட்டு வருமானம் மகிழ்ச்சியைத் தரும். குரு 5ஆம் இடத்தில் இருந்து சந்திரனை நோக்குவது, கடற்பிரயாணம் செய்வோர்க்கு நன்மை தரும். வாகன சுகம், உறவினர்வருகை ஆகியவற்றால் குடும்ப சுகத்தைத் தரும். மாணவர்களுக்கு கல்விக்கு நன்மை தரும் வாரமாகும். உத்தியோகஸ்தர், தொழிலாளர்களில் சிலருக்கு இடமாற்றமும் அலைச்சலும் உண்டு. இந்தவாரம் குருசந்திர யோகமான குதூகலம் தரும் வாரமாகும்.

## சிங்கம்

இந்தவாரம் உங்களுக்கு ஏழரைச் சனிபகவானுடைய நடுக்கூறு ஆரம்பித்த வாரமாகும். தலைக்கு வேதனை தரும் சம்பவங்கள் குறைந்தாலும் உடல்நிலையில் கவனம் எடுக்கவேண்டிய வாரமாகும். சிலருக்கு இரத்தம் கெடக்கூடிய சுகயீனங்களால் சிகிச்சை பெறவும் பலன்வரும். குடும்பத்தில் திருமணவயதுடையவர்களுக்கு கைக்கெட்டியது வாய்கெட்டாத நிலைமாதிரி திருமணப்பேச்சுகள் கைநழுவிப்போகக்கூடும். மற்றும் நிச்சயிக்கப்பட்ட திருமணம் கூட கைகூட வாய்ப்பில்லாத நிலையும் வரலாம். குடும்பஸ்தர்களுக்கு ஏதோஒருவகையில் குடும்பப் பிரச்சினையும் எதிர்நீச்சலும் தரும். வியாபாரிகள், தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு தொழிலால் லாபம் தராத சமபலனே உண்டு. மாணவர்களுக்கு கல்வி நிலை சமபலன்தரும். பொதுவாக இந்தவாரம் எதிர்நீச்சல் அடித்து முன்னேறும் வாரமாகும்.

## கன்னி

உங்களுக்கு இந்தவாரம் உங்கள் ராசிக்கு 12 இல் சனிபகவான் வந்தபடியால் எழரைச் சனிபகவானுடைய முற்கூறுக்காலம் ஆரம்பித்த பலனாகும். 12ஆம் இடத்து சனி ராவணனுக்குத் தலைபோன காலம் என்று சொன்னாலும் அசுர குருவான சுக்கிரன் [illegible] இல் இருப்பது சனிபகவானால் கெடுதியான பலன்கள் தர இடமில்லை. ஆனாலும் சிலருக்கு மறதி, மயக்கம், தலையிடி இப்படியான சுகயீனமும் சிகிச்சையும் ஏற்படுவதுடன் வேண்டப்படாதவர்கள், கடனாளிகளால் தலைக்கு வேதனைதரும் சம்பவங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பஸ்தர்களுக்கு ஓரளவு சுகம் தரும் காலமாகும். வியாபாரிகள், தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு வருவாய் சமபலன் தரும். பொதுவாக சுமாரான பலன்தரும் வாரமாகும்.

## துலாம்

இந்தவாரம் உங்கள் ராசிக்கு 11 ஆம் வீட்டிற்கு சனிபகவான் வந்தபடியால், லாபம் தரக்கூடிய நிலை மந்தநிலையைத்தரும். 2 ஆம் இடத்து குரு குடும்பசுகத்தைத் தரும். கணவர், மனைவி, உறவுகள், குடும்பஸ்தர்களுக்கு நற்பலனைத்தரும். கடந்த காலங்களில் இருந்த தொழில்நிலைக் கஷ்டங்கள் தீரும். கடல்கடந்த நாட்டிலிருந்து தொழில் செய்வோருக்கும், இறக்குமதி செய்யும் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கும் புதன்கிரகம் நன்மைதரும். மாணவர்களுக்கு உயர்கல்வி நன்மைதரும். அந்நியர் உதவி கிட்டும். கைவிட்டுப்போன உடைமை, சொத்து மீண்டும்சேரும். உத்தியோகஸ்தர்கள் உயர்நிலை பெறுவர். பொதுவாக இந்தவாரம் குடும்பசுகம் தரும் வாரமாகும்.

## விருச்சிகம்

உங்களுக்கு இந்தவாரம் தொழில்ஸ்தானத்திற்கு சனிபகவான் வந்த வாரமாகும். சனியும் கேதுவும் சிங்கராசியான 10 ஆம் வீட்டிலிருப்பது புதிய தொழில் செய்வோருக்கு நற்பலன்தருவதுடன் உத்தியோக உயர்வு அல்லது புதிய நியமனங்களை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு ஏமாற்றம் தரும் வாரமாகும். ஆனாலும் உங்கள் ராசி அதிபதியான சந்திரனுடன் குரு சேர்ந்திருப்பது குரு சந்திரயோகமான பணவரவு மற்றும் வருமானத்தில் ஓரளவு சுகமடையக்கூடிய வாரமாகும். குடும்பஸ்தர்களுக்குப் புத்திரரால் சிறப்புண்டு. மாமன் வழிச்சுகமிராது. பொதுவாக இந்தவாரம் சுமாரான பலன்தரும் வாரமாகும்.

## தனுசு

இந்தவாரம் அட்டமத்துச் சனிபகவான் அட்டமத்திலிருந்து விலகி 9 ஆம் வீடான சிங்கராசிக்கு வந்த வாரமாகும். எனவே பணச்செலவும், நட்டமடைதலும், கடன் கொடுக்கல் வாங்கலால் தகராறும் ஏற்பட வாய்ப்புண்டு. தொழிலாளர், உத்தியோகஸ்தர்களுக்கு தொழில் நிலையில் சிறப்புண்டு. சிலருக்கு கடல்பிரயாணம் செய்து தொழில் வாய்க்கவும் பலன் உண்டு. குடும்பஸ்தர்களுக்குப் பணத்தால் வரக்கூடிய பிணக்குகள் வந்துதீரும். மாணவர்களுக்கு கல்விநிலையில் மந்தநிலை ஏற்படும். தொழிலாளர், விவசாயிகள் வெளிநாட்டு உதவியைப்பெறுவர்.

## மகரம்

உங்களுக்கு இந்தவாரம் 7ஆம் இடத்தில் நின்ற சனிபகவான் அட்டமத்திற்கு வந்த வாரமாகும். இது தும்மல்போய் இருமல் வந்தபலனாகும். கடந்தகால துன்பநிலை நீங்கினாலும் நோய், பதட்டம், பகை, விபத்து இப்படியானவை தரக்கூடிய வாரமாக இருக்கிறது. எனினும் குரு 11 ஆம் வீட்டிலிருப்பது லாபம், சுகம்தரும் வாரமாகும். புத்திரருக்கு கஷ்டங்கள் மற்றும் புத்திரரால் ஏற்படக்கூடிய கவலையும் பணச்செலவும் வந்து பின் தீரும். கூட்டுத்தொழில் நன்மைதராது. குடும்பஸ்தர்களுக்கு இந்தவாரம் எதிர்நீச்சல் தரும் வாரமாகும். அரச உத்தியோகஸ்தர்களுக்கு தொழில் நிலைச் சிறப்புண்டு.

## கும்பம்

உங்களுக்கு இந்த வாரம் 6ஆம் வீட்டிலிருந்த சனிபகவான் 7 ஆம் வீடான சிங்கராசிக்கு வந்த வாரமாகும். எனவே இந்தவாரம் உங்களுக்கு ஏழரை போன்ற பலனாகும். இதனால் திருமண வயதுடையவர்களுக்குத் திருமணக்குழப்பமும் அல்லது முடிவெடுக்கமுடியாத பலனும் ஏற்படும். சிலருக்கு இரத்தம் கெடக்கூடிய சுகயீனங்களால் கஷ்டமும் நேரிடலாம். திருமண வயதுடையவர்களுக்குத் திருமணம் கொடுத்து, கெடுக்கும் காலமாகவும் அமையலாம். தொழிலாளர்களுக்கு சமபலனும் உத்தியோகஸ்தர்களுக்குத் தொழில் நிலை மாற்றங்களும் அலைச்சலும் ஏற்படும். குடும்பஸ்தர்களுக்கு குடும்பசுகமுண்டு. கணிதத்துறை மாணவர்களுக்கு கல்வியில் நற்பலன் உண்டு.

## மீனம்

இந்த வாரம் உங்களுக்கு குரு 9 ஆம் வீட்டிலிருந்து சந்திரனை நோக்குவது குருசந்திர யோகமான நற்பலனதரும் வாரமாகும். பணவரவு, மதிப்பு, குடும்பச்சிறப்பு மற்றும் செல்வாக்குடைய பலன் தரும் வாரமாகும். மேலும் 6 இல் சனிபகவான் சென்றிருப்பது அதிகாரம், ஆளுமை என் அடிப்படையில் உயர்பதவிகள் கிட்டும். குடும்பஸ்தர்களுக்கு குரு நன்மைதரும் பலன். தொழிலாளர், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்களுக்கு லாபம் தரும் வாரமாகும். மாணவர்களுக்கு கல்வியால் சிறப்புண்டு. புதியதொழில் செய்வோர் நன்மையடைவர். சிலருக்கு கடல் பிரயாணம் நன்மை தருவதுடன் வெளிநாடு செல்வோருக்குப் பிரயாண சுகம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடனான
# முதல் வருட நினைவுநாள்



அன்னை மடியில்
26.09.1983

ஆண்டவன் அடியில்
12.08.2006

செல்வி
## மேரி அன்ரனிற்றா அன்ரனியூஸ்

(யாழ்.பல்கலைக்கழக கலைப்பிரிவு, 3ஆம் வருடம், தாழையடி)

நங்கா உன் நினைவாக ஆண்டொன்று கடந்தும்
உனக்காக எங்கள் மனம் ஏங்கித்தவிக்குதம்மா
உன் கொஞ்சும் மொழி, புன்சிரிப்பொலி கேட்காது
தினமும் எங்கள் இதயம் கண்ணீரால் கரையுதம்மா

அன்புச் செல்வமே!
உனைப்பிரிந்த ஒவ்வொரு நொடிப் பொழுதும்
ஓராயிரம் பொழுதாகுதம்மா
உன் கல்வி, கலைத்திறமை கண்டு மகிழ்ந்து நாம்,


பலகனவுகள் கண்ட வேளை தனில்
பாழான நோய் எம்மிடமிருந்து உனைப்பிரித்ததேனம்மா?
தரணியில் உனக்கு வினைவருமென்றுதானோ
தற்பரனார் தனக்கென்று உனைத் தத்தெடுத்தார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை (13-08-2007) திங்கட்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்திலும் அருள் ஆச்சிரமத்திலும் காலை 6 மணிக்கும் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் காலை 7 மணிக்கும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு செபிக்கு மாறு வேண்டப்படுகின்றீர்கள்.

கல்லூரி வீதி,
இளவாலை. (63422)

திரு.திருமதி அன்ரனியூஸ்
(பெற்றோர்).


Care™ Trichology Clinic (Pvt)Ltd.



இங்கு தலைமுடி உதிர்தல், வழுக்கை,
பொடுகு, Gray Hair,Alopecia,
Psoriasis, Suborrich Qermabibus
போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும்
இந்திய மருத்துவ நிபுணர்களால் மருத்துவ
ஆலோசனைகளும் சிகிச்சையும் வழங்கப்படும்.

இதோ!!!

யாழ் மக்களுக்கும் தூர இடத்தில்
இருப்பவர்களுக்கும் ஏற்கனவே எம்மிடம்
சிகிச்சை மேற்கொண்டு தொடர முடியாமல்
போனவர்களுக்கும் புதியவர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!
தொலைபேசி மூலமாக மருத்துவ
ஆலோசனை பெற்று உங்கள் இருப்பிடம்
தேடி மருந்து பொருட்கள்
அனுப்பி வைக்கப்படும்.

இலங்கையில் அமையப் பெற்றிருக்கும்
ஒரேயொரு தலைமுடி சிகிச்சை மற்றும்
ஆராய்ச்சி மையம் இதுவே...

Head Office
V Care Health Clinic (Pvt)Ltd.
Care No. 21, Frezer Avenue, Dehiwala
Tel: 011 2735715, 077 9001324
Branch No:.68, 2nd Cross Street,Vavuniya.
Tel: 024 4589973


# ஓராண்டு நினைவஞ்சலி



## தியாகலிங்கம் சேந்தன்

அன்னை மடியில்
01.03.1990

அசுரரின் பிடியில்
25.07.2006

காரைநகர், களபூமி திக்கரையைப் பிறப்பிடமாகவும் கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகலிங்கம் - தனலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் ராகவனின் அருமைத் தம்பியும் யாழ்.யாழ்ற்றன் கல்லூரி ஸ்தாபக ஆசிரியர் சீவரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அருமைப் பேரனுமாவார்.

இவர் யாழ்.யாழ்ற்ரன் கல்லூரியின் ஆண்டு 10A மாணவனும் இக்கல்லூரியில் பல விளையாட்டுக்களிலும் முதலுதவிப் பிரிவிலும் கல்வியிலும் சிறந்து விளங்கினார். 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையிலும் திறமைச் சித்தி எய்தினார். இறுதியாக ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரிக்கும் காரைநகர் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ற்ரன் கல்லூரிக்கும் இடையில் ஊர்கா வற்றுறையில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் தனது சக மாண வர்களுடன் சேர்ந்து வெற்றி யைத் தேடித்தந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர நடேச பெருமானைப் பிரார்த்திப்போமாக.

கோவளம்,
காரைநகர். (63414)

அன்னாரின் பிரிவால் வாடும்:
தியாகலிங்கம் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பூர்வீகத் தேசிய இனத்துக்கான உரிமைகள் தமிழருக்கு உண்டு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கக்கோரி, பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்காவின் கலிபோர்ணிய மாநிலத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணியான கரன் பாக்கர் மனு ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார். அந்த மனுவில் அவர் சுட்டிக்காட்டியுள்ள காத்திரமான விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

அமெரிக்காவும், இலங்கை அரசும் தூண்டியதன் விளைவாகவோ புலிகள் மீது தடை விதிக்கும் செயற்பாட்டை பிரிட்டனும், ஐரோப்பிய ஒன்றியமும் மேற்கொண்டன என்று சுட்டிக்காட்டும் அவர், இந்த நடவடிக்கை சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டமைக்கும் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பு நடவடிக்கை தற்போது தீவிரமடைவதற்கும் காரணம் என்றும் குற்றம் சுமத்துகின்றார்.

இவ்வாறு புலிகளுக்கு எதிராகத் தடை விதிக்க முயல்வது சமாதான முயற்சிகளுக்குக் குந்தகத்தை ஏற்படுத்தும் என்பதை ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டி வந்தோம். அப்படியேயாகி உள்ளது என்பதையும் வெளிப்படுத்தி வந்துள்ளோம்.

இலங்கை அரசுடன் சமதரப்பு என்ற அந்தஸ்துடன் பேச்சுக்களில் பங்குபற்ற விடுதலைப்புலிகள் முன் வந்தனர். ஆனால் புலிகள் மீது சில முக்கிய சர்வதேச நாடுகள் விதித்த தடையானது புலிகளின் சமதரப்பு அந்தஸ்தைச் சீர்குலைய, சமாதான முயற்சிகளும் சீர் குலைந்தன.

எனவே இவ்விடயத்தின் கள யதார்த்த விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்து அதன் அடிப்படையில் புலிள் மீதான தடையை முக்கிய சர்வதேச நாடுகள் விலக்கிக் கொள்வது, மீண்டும் சமாதான முற்சிகளுக்கு உயிரூட்ட உதவும் என்கிறார் கரன் பாக்கர்.

அதேசமயம், கொசோவோ மக்களுக்கு விடுதலை வேண்டும் என வற்புறுத்தும் பிரிட்டன், அந்த மக்களை விட சுயநிர்ணய உரிமை அதிகம் உள்ள ஈழத் தமிழர் குறித்து கண்மூடித்தனமாக இருக்கின்றமை குறித்தும் அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைத் தீவில் ஈழத்தமிழ் மக்கள் ஆகக் குறைந்தது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த வரலாற்று வேரோடல்களைக் கொண்டவர்கள். தனியான வாழிடப் பிரதேசத்தைக் கொண்ட தாயகம், தனியான இனம், தனியான பண்பாடு, தனியான வாழ்க்கை முறை என்று தனித்துவத்தோடு வாழ்ந்து வருபவர்கள்.

அதுமாத்திரம் அல்ல, பிரிட்டனின் ஆட்சி அதிகாரம் இலங்கைத் தீவிலிருந்து விலக்கப்பட்டு, அது பெரும்பான்மையினரான பௌத்த - சிங்களத் தலைமைகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்தமை போன்ற இன ஒடுக்குமுறையையோ, அட்டூழியங்களையோ, படுகொலைகளையோ, வாழ்வியல் உரிமை மறுப்புகளையோ கொசோவோ மக்கள் எதிர்கொள்ளவே இல்லை என்றும் சட்டத்தரணி கரன் பாக்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைக்கான போராட்டத்தில் ஈழத்தமிழர்கள் அளவுக்கு சுதந்திர உரிமையோ, அதைப் பெறுவதற்கான பாதையில் தமிழர்கள் அளவுக்கு இழப்புக்களையோ கொண்டிராத கொசோவோவுக்காகக் குரல் எழுப்பும் பிரிட்டன் ஈழத்தமிழர் விடயத்தில் தலைகீழாகச் செயற்படுவது ஏன் என்றும் கரன் பாக்கர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

இன்னொரு விடயத்தையும் அவர் தெளிவுபடுத்தி இருக்கின்றார். இலங்கையில் நடைபெறுகின்ற உள்நாட்டு யுத்தம் இலங்கை அரசைக் கைப்பற்ற நடக்கின்ற போர் அல்ல. முழு நாட்டின் அதிகாரத்தையும் கைப்பற்றும் நோக்கில் நிக்கரகுவாவிலும் எல்சல்வடோரிலும் நடைபெற்றதைப் போன்றதல்ல இந்த யுத்தம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கான போராட்டமே இலங்கைத் தீவில் நடைபெறுகின்றது. பங்களாதேஷ் தனி நாடாக மாறுவதற்கு - பாகிஸ்தானிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானை விடுவிப்பதற்காக - நடந்தது போன்ற யுத்தம் இது. அதேபோல பல்வேறு சுதந்திர அரசுகள் உருவாக யூகோஸ்லேவியாவில் இடம்பெற்றது போன்ற யுத்தம் இது என்கிறார் அவர்.

ஈழத்தமிழ் சாகியம் இலங்கையில் வெறும் தேசிய இனம் மட்டுமல்ல வரலாற்றுக் காலம் வரை வேரோடிச் செல்லும் தொன்மையான பண்பியல்புகளையும் தாயக உரிமையையும் கொண்ட பூர்வீகத் தேசிய இனமாகும். அதன் மறுக்கமுடியாத வரலாற்று உரிமைக்கான போராட்டத்தை வெறும் 'பயங்கரவாதமாக' சித்திரித்து அதற்குள் அடக்கிவிடமுடியாது என்பதை பிரிட்டன் உட்பட மேற்கு நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்.

# பிறப்புச் சான்றிதழ்களை 1 மணி நேரத்தில் வழங்கும் முறை விரைவில் குடாநாட்டில்

## மனித உரிமை ஆணைக்குழுவின் அனுசரணையுடன்

யாழ்ப்பாணம்,ஓக.12

ஒரு மணித்தியாலத்தில் பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான முறை ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது உள்ளக இடம்பெயர்ந்தோர் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் விரைவில் செயற்படுத்தவுள்ளது.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட அதிகாரி எஸ்.லெனின்குமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வரும் காலங் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளுக்கான நடமாடும் சேவையில் கலந்துகொள்ளும் பொருட்டு யாழ். வந்துள்ள அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது-

இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் அனுசரணையுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான செயற்றிட்டத்தின் மூலம் இந்த நடமாடும் சேவை நடைபெற்று வருகின்றது.

குடாநாட்டில் உள்ள பிரதேச செயலர்கள், மேலதிக மாவட்டப் பதிவாளர் ஆகியோர் இச்செயற்பாட்டுக்கு போதிய ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

ஒரு மணித்தியாலத்தில் பிறப்புச் சான்றிதழைப் பெறுவதற்கான முறையொன்றை நாம் விரைவில் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே அனுராதபுரம் மாவட்டத்தில் இந்த முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இப்போது குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் சேவை மூலம் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது காலங்கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

அத்துடன் பதிவாளர் திணைக்களத்தில் சிங்களத்தில் உள்ள ஆவணங்களைத் தமிழாக்கம் செய்வதற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. - என்றார்.

(அ-50)

# மாவைக் கந்தன் ஆலயத்தில் நேற்று பக்திபூர்வமாக நடந்த தேர்த்திருவிழா

## கீரிமலையில் இன்று ஆடி அமாவாசைத் தீர்த்தம்

யாழ்ப்பாணம்,ஓக.12

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம் பெற்றது.

காலையில் இருந்தே திரண்ட 2 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் பிரதட்டை செய்தும் அடி அழித்தும் கற்பூரதீபம் ஏந்தியும் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர்.

காலையில் விசேட பூசைகள் இடம் பெற்று, 11 மணியளவில் முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து ப்க்தர்களுக்கு அருட்காட்சி தந்தார்.

தேர் வீதி வலம் முடிந்த பின்னர் இரு மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நேற்று அதிகாலை முதல் தெல்லிப்பழை சோதனை நிலையம் முன் கூடிய பக்தர்கள் தமது அடையாள அட்டைகளைக் கையளித்து, அங்கிருந்து படையினரின் பஸ்களில் ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

இன்று முருகப் பெருமான் காலையில் கீரிமலைக்கு எழுந்தருளி கண்டகி தீர்த்தில் தீர்த்தவாரி இடம்பெற்று நண்பகல் ஆலயத்துக்குத் திரும்புவார்.

பக்தர்கள் தீர்த்த உற்சவத்தில் கலந்துகொள்ள வசதியாக தெல்லிப்பழை சோதனை நிலையம் மற்றும் சேந்தாங்குளம் சோதனை நிலையம் ஊடாக விசேட போக்குவரத்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(அ-1-68)

# உதவிக் கொடுப்பனவுத் திட்டம் அமைச்சரால் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.12

குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு உதவிக் கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டங்களை, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை ஆரம்பித்து வைக்கவிருக்கின்றார்.

அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ள மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் கணவரை இழந்த மற்றும் கணவரால் கைவிடப்பட்ட 40 வயதிற்கு மேற்படாத பெண்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகள், அங்கவீனர்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகள், வறிய குடும்பங்களைச் சேர்ந்த முதியோர்களுக்கு சுயதொழில் முயற்சிகளுக்கான உதவித் தொகைகள், தொழில் வாய்ப்புக்களை இழந்த நிலையிலுள்ள பெண்களுக்கான உதவித் தொகைகள், அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்களுக்கான ரூபா 3,000 மாதாந்தக் கொடுப்பனவுகள், பொருளாதார நிலையில் பின்தள்ளப்பட்டுள்ளவர்களுக்கான மருத்துவ உதவித் தொகைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான உதவித் தொகைகள் மற்றும் உபகரணங்கள், பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சார வசதிகளைப் பெறுவதற்கான உதவித் தொகைகள், பொதுக் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கான உதவித் தொகைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் மேற்படி உதவித் தொகைகள் வழங்கப்படும்.

இதன்பிரகாரம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளுக்கும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர், உடுவில், யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளுக்கும் 15ஆம் திகதி புதன்கிழமை நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பிரிவுகளுக்கும் 16ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய பிரிவுகளுக்கும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமராட்சியைச் சேர்ந்த கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளுக்கும் உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன.

(அ-1)

# ஸ்ரீமகாமாரி ஆலயத்தில் பொன்முகம் பதித்தல்

யாழ்ப்பாணம்,ஓக.12

வண்ணை கிழக்கு ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயத்தில் பொன்முகம் பதித்தலும் சப்பரத் திருவிழாவும் நாளை திங்கட்கிழமை மாலை இடம் பெறவுள்ளன.

பிற்பகல் 3.15 மணிக்கு குருமார் வேதபாராயணம் ஓத, பொன்முகத்தை பக்தர்கள் தரிசித்தபின் அம்மனுக்கு பொன்முகம் பதிக்கப்படும்.

பின்னர் பொன்முகத்தை ஆக்கிய கலைஞர் க.மகேஸ்வரன் கௌரவிக் கப்படுவார்.

(அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 28 | திங்கட்கிழமை 13.08.2007 |
| திதி : பிரதமை | பி.ப : 05.26 |
| நட்சத்திரம் : | ஆயிலியம் பி.பகல் : 01.36 |
| சுபநேரம் | : [illegible] |
| ராகுகாலம் | : [illegible] |

# இறைவனைப் பற்றிக்கொண்டால் எம் சுமைகளுக்குச் சக்தி கிடைக்கும்

**ஞாயிறு நற்பிரசாதம்**

ஆதியில் இறைவன் மனிதனுக்கு இனிமையான இன்பமான வாழ்வைக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் மனிதனோ இறைவனை மறக்க முற்பட்டதால் துன்பம் எனும் திறவுகோலை அவன் கரங்களில் கையளித்தார்.

அதன் வழியாக பரலோக வாழ்வின் அதாவது நிரந்தர மகிழ்ச்சிக்குரியவன் வீட்டின் கதவுகள் திறக்கப்படவேண்டுமென சித்தமானார். அதற்கு எடுத்துக்காட்டாகத் தம் ஒரே மகன் கிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி அவரது துயரப்பாடுகள், மரணம் இவற்றின் மூலம் மீட்பின் வழியைக் காண்பித்தார்; கற்றுக்கொடுத்தார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது இறை தந்தையின் திட்டத்தையும் சித்தத்தையும் எல்லா மக்களும் அறியும்படி போதனை, சாதனைகள் மூலம் தம்மை வெளிப்படுத்தினார். இந்த வகையில் தமக்கு உதவியாகப் பல சீடர்களைத் தம்முடன் இணைத்துக் கொண்டார். தம்மைப் பின் தொடர்ந்து தம்பணியினைத் தொடர அவர்களைத் தம் சீடத்துவ வாழ்வுக்கு அழைத்தார்.

ஆயினும் மனிதரின் இயல்பான போக்கிற்கு சவால் விடும் வகையில் கண்டிப்பான பல கட்டளைகளை அவர் பிறப்பித்தார். 'என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் ஆகியோரையும் ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாகக் கருதினால், அவர் என் சீடராய் இருக்க முடியாது'(லூக் 14:26) என்ற இயேசுவின் வார்த்தையை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளமுடியுமா?

ஆனால் சீடர்களுக்கோ, தியாக சிந்தையும், உயிரைவிட மேலாக இயேசுவிடம் அவர்கள் கொண்டிருந்த பற்றுறுதியும் அவரது கனமான கட்டளையை இலகுவாகக் கடைப்பிடிக்கத் துணைநின்றன. மேலும் 'தன் சிலுவையைச் சுமக்காது என்பின் வருபவன் என் சீடராய் இருக்க முடியாது' (லூக் 14:27) எனவும் கூறினார். அதாவது இறையரசின் பயணம் இலகுவானதல்ல. மாறாக சுமைகளைத் தாங்கிச் சோதனைகளைக் கடந்து செல்லவேண்டுமென்பதே அவரது வேண்டுகோளாகும்.

இந்த இறைவார்த்தைகளை நாம் அறிந்திருந்தும் எம் துன்ப, துயரங்களை எந்தளவிற்குச் சகித்துக் கொள்கின்றோம்? சில வேளைகளில் நாம் இறைவனைக் கடிந்து கொள்வதில்லையா? இறைவனில், இறைவார்த்தையில், எமக்கு ஆழமான விசுவாசம் இல் லாமையினாலயே இவ்வாறான மன உளைச்சலுக்கு ஆளாகின்றோம். எம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் நாம் இறைவனைப் பற்றிக்கொண்டால், அவர் அன்பு எம் சுமைகளுக்குச் சக்தியளிக்கும் எம் சோர்வுகளுக்குப் பலமளிக்கும் என்பது உண்மையாகும்.

திருமதி றோஸ் இராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் இரகசிய இணக்கப்பாடு இருந்ததாக முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதி சூரியராட்சி குற்றஞ்சாட்டி வருகிறார். இது பற்றி விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்கும்படியும் அவர் கேட் டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக ஒருநாள் விவாதம் நடத்திய பின்பே தெரிவுக் குழு அமைப்பது குறித்து ஆராய லாம்.

விவாதத்தின்போது தெரிவுக்குழு அமைக்க வேண்டுமா, இல்லையா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்திய பின்பே முடிவு செய்யலாம்.

விரைவில் ஒரு நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் இடம் பெறும் என்றார் அமைச்சர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பதற்கு முன்னர் ஒரு விவாதம் நடத்தியே முடிவு செய்வது என்ற அரசின் வழிமுறையை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி நிராகரித்துள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து கருத்துத் தெரி விக்கையில் - அமைச்சர் சிறிபால டி சில்வா கூறும் வழிமுறை வழமையான ஒன்றல்ல. நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிப்பதை தவிர்ப்பதற்காகவே அரசு இப்படி ஒரு வழமைக்கு மாறான செயலில் ஈடுபட முயற்சிக்கிறது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்துவதனைத் தவிர்ப்பதற்கான தந்திரம் இது. - என்றார். (அ-1)

## மரண அறிவித்தல்கள்



### சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கச்சாய் வீதி, 4 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி 07.08.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவ்ரெட்ணம்- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரியும் சிவராசா, புனிதவதி (கனடா), சந்திரகுமார் (கனடா), புவனேஸ்வரி, ஆனந்த நடேசன் (இத்தாலி), சுந்தர்ராஜன் (சுவிஸ்), சோமஸ்கந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மேஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி, சிவராசா, மேகலா, சுலோசனா ஆகியோரின் அன்பு மாமியும், சோபிகா, சௌமிகா, பர்மிகா, வானுதி, சத்திகா, சுகீலன், சுவேந்தன், சுரேன், சிந்துஜா, அபிதாரணி, வேணுகோபன், யாழினி, நிரோசன், தீபிகா, துவாரகன், கிஷான், தட்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2007) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு அல்லாரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

*4 ஆம் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.* (63287)



### திருமதி தியாகராசா இராசேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா இராசேஸ்வரி நேற்று (11.08.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினம் தியாகராசாவின் அன்பு மனைவியும் திருமதி வேலம்மாவின் அன்புச் சகோதரியும், Dr. சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற R.M.O.) விக்னேஸ்வரி, ஈஸ்வரபாதம் (மின்பொறியியலாளர் - திருகோணமலை), குஞ்சிதபாதம் (கணக்காய்வாளர்), நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் திருமதி தங்கம் வர்க்கீஸ், சண்முகானந்தன் (ஓய்வுபெற்ற நீதிமன்ற லிகிதர்), சுமங்கலாதேவி, வசந்தி (ஆசிரியை, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற நாதமணி ஆகியோரின் அன்பு மாமியும் சிவசங்கர், சிவஸ்வர்ணபூரணி, தயாளினி, துஷித்தா, உமா, சேந்தன், சவிதா, அருணா (யாழ். போதனா வைத்தியசாலை), மீனா (ஆசிரியை, யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சுதர்சன், இளங்கோ, ஆதவன், கௌதமன் (மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), ராஜாதித்தன், சாண்டில்யன், வைஷ்ணவி, நாதப்பிரியா, தமிழ்ப்பிரியா, சண்முகப் பிரியா (மாணவி, யாழ். உயர் தொழிநுட்பக் கல்லூரி), பிரபு ஆகியோரது அன்புப் பேர்த்தியும் வித்தியாதரன், மிருதிவிகாஷ், பவதாரணி, துவாரகன், டார்மிசன், திப்யாசாகர், மதுமிதன், அபராஜீதன், விதுசன், விதுஷிகா, நிருஷா, டினோசா ஆகியோரின் அன்புப் பூட்டி யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. குஞ்சிதபாதம் (மகன்).

*'இராசபவனம்', மஞ்சத்தடி,*
*இணுவில்.* (63286)



### விஸ்வலிங்கம் வன்னியசிங்கம்

ஆனைக்கோட்டை, ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் கன்னாதிட்டி. இல. 80, கொழும்பு - 13 ஐ வசிப்பிடமாகக்கொண்ட விஸ்வலிங்கம் வன்னியசிங்கம் 10.08.2007 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் விஸ்வலிங்கம் - கனகமணி தம்பதியரின் புதல்வனும் Dr. சண்முகம் - மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரியின் (சின்னவவா) அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2007) ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
திருமதி ர. தக்ஷினி (பெறாமகள்)

*80, கன்னாதிட்டி,*
*கொழும்பு - 13.* (63289)

## ஜானக பெரேரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளராக இருக்கும் கோத்தபாய ராஜபக்ஷவை பதவிநீக்கம் செய்து, அந்தப் பதவிக்குத் தகுதியானவரான ஜானக பெரேராவை நியமிக்குமாறு அண்மைக் காலமாக ஐ.தே. கட்சி கோரிவருகிறது. எனினும் ஜானக பெரேரா அரசியலில் ஈடுபடுவதையே பெரிதும் விரும்புவதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-1)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் பயன்தரக்கூடியதாகவும் ஆக்க பூர்வமாகவும் அமைந் திருந்தது. விவசாயத் துறையை புனரமைப்பு செய்வதற்கும் சிவில் நிர்வாகம், பொலிஸ்படை அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது: (அ-1)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்து வந்தனர். அந்த எச்சரிக்கை செயல் வடிவம் பெறும் வகையில் திருகோண மலை சென்று குடியமர மறுப்பவர்களுக்கான நிவாரண உதவிகளை நிறுத்துமாறு ஆளுநர் மொஹான் சம்பந்தப்பட்ட அதி காரிகளுக்கு வார இறுதியில் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-1-151)

## ஒரு வாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் கண்காணிப்பாளர்களுடன் பிர தான கண்காணிப்புக் குழு ஆராய்ந்தது.

* குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, நகருக்கு நுழைவதில் உள்ள சிரமங்கள், படையினரின் சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் அதிகரிப்பு ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன.
* கிழக்கில் கருணா குழுவால் கடத்தல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஒரு வாரத்தில் 8 பேர் கடத்தப்பட்டுள்ளனர்.
* அக்குழுவின் திருக்கோயில் அலுவலகத்தில் 45 பொதுமக்கள் பலவந்தமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என பொலீஸார் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியப்படுத்தி உள்ளனர்.
* கிழக்கில் குறிப்பிட்ட வாரத்தில் மூன்று இராணுவ மோதல்களும், கிளை மோர் தாக்குதல்களும் ஷெல் தாக்குதல்களும் முறையே தம்பலகடுவ, கொக்கட்டிச்சோலை, நிலாவெளி ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன.
* மூதூர் பகுதியில் மக்களுக்கு இன்னும் வழமையான வாழ்க்கை நிலைக்குத் திரும்ப முடியவில்லை. அவர்கள்தமது தொழில்களைச் செய்யவிடாது பாதுகாப்பு நிலைமைகள் தடையாக உள்ளன - என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-1)

### இவ்வார இராசிபலன்

**உள்ளே 7ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள இராசிபலன் இம் மாதம் 12.08.2007 - 18.08.2007 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குரியதாகும். தலைப்பில் 05.08.2007 - 11.08.2007 வரையுள்ளதாக தவறுதலாக அச்சாகி விட்டது. அதனைக் கருத்திற் கொண்டு வாசிக்கவும்.**


### ஒத்துமாறல்

யாழ். மாவட்டத்தில் கணக்கியல் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றும் ஒருவர் வவுனியா மாவட்ட பாடசாலையில் உள்ள ஓர் ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

**தொடர்பு: 077 9511058.**

### PERSONAL CLASS

Spoken English (with gramer)

தனிப்பட்ட ரீதியாகவோ or குழு ரீதியாகவோ உங்கள் வீடுகளுக்கு வந்து 100% பேச்சுப் பயிற்சியுடன் கற்பிக்கப்படும்.

தொடர்புகட்கு :- 077 9672853 (63396)

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகலவிதமான மோட்டார் சைக்கிளின் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டிக் கொடுக்கப்படும்.

இல 06, கனகசபை லேன்,
வண்ணார் பண்ணை, சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.
0779061568, 0775925088. (63491)


## 55 வயதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பாதுகாப்பு நிலைமையைக் கருத்திற்கொண்டு மீண்டும் பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கான வயதெல்லையை மாற்றியமைக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

புதிய நடைமுறையின் பிரகாரம் 55 வயதுக்கு மேற்பட்டவர்களும் பாதுகாப்பு அனுமதி பெறவேண்டும். 10 வயதுக்கு உட்பட்டவர்கள் பாதுகாப்பு அனுமதி பெறத் தேவையில்லை - என்று உள்ளது. (அ-1)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவது கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி நித்தம்பு வவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஐ.தே.கட்சி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள்பிரிவு ஆகியவற்றின் கூட்டு முன்னணியின் ஆலோ சராகப் பணியாற்ற உள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பங்கேற்கவுள்ளார். தற்போது லண்டனில் தங்கியுள்ள சந்திரிகா அடுத்த வாரம் இலங்கை திரும்ப விருக்கின்றார்.

நாடு திரும்பியதும் கூட்டு முன்னணியின் அமைப்புப் பணிகளில் அவர் முக்கிய பங்கு வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-1)

## ஜோன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவரப்பட்ட இந்த விவாதம் தொடர்பான யோசனையில் -

அடுத்த வாரமளவில் வருகை தர உத்தேசித்துள்ள ஐ.நா. அதி காரியின் விஜயத்தை அரசு ரத்துச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-1)

## மருமாதா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து இம்முறையும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் வரவிருக் கின்றனர் என்று மன்னார் ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)


### இணைந்த கணிதம் Mr.K.B.மயூரன்

A/L 2009
★ மீநித் தேற்றம்
★ வேக நேரவரைவு
Mon., Wed., Fri. 11.00Am
(விடுமுறை வகுப்புகள்)
SHAMROCK
ஈச்சமோட்டை வீதி,
யாழ்.

### MS CENTER

PHYSICS
MR.M.ஸ்பெல்மன்
A/L 09
ஆரம்பம் 13.08.2007
திங்கள் 5 - 6 PM

A/L 08
புலங்கள்
ஆரம்பம் 13.08.2007
திங்கள் 3 - 4 PM

18, அச்சுக்கூட வீதி யாழ்.
(பெரிய கோவில் அருகில்)

### B.A. Part - I கருத்தரங்கு

தமிழ், இந்துநாகரிகம், அரசறிவியல், புவியியல், நாடகம், பொருளியல் ஆங்கிலம் E.SL வணிகக்கல்வி.
ஆரம்பம் - 13/08/2007 திங்கள் 9 Am

13 ஆம் திகதி முதல் 19 வரை (7 நாள்கள்) நடைபெறும். மேலதிக விபரம் அலுவலகத்தில் பெறவும்.

திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி,
இணுவில்.

### 2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான

வெற்றித் தேர்வு: திருமலை. எஸ். கணேசலிங்கம்
அவர்களின் விசேட வெற்றித் தேர்வு வினாவிடையும், கையேடும் (19 பக்கங்கள்) விற்பனையாகின்றன!!
அனைத்துப் புத்தகசாலைகளிலும் இன்றே பெறுங்கள்!

### துரித தபால்கள், பொதிகள் சேவை

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்!

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

## திருமுருகன் கொம் நெற்



259. கே.கே.எஸ். வீதி.
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7835

46 ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.
தொ.பே. 021 222 7310


## மரண அறிவித்தல்கள்



### திருமதி பாலசுப்பிரமணியம் பகவதி

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது கலைமகள் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் பகவதி 10.08.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நா. கந்தசாமி, பொ. தங்கம்மா, செ. அன்னம்மா, மு. இரத்தினம், இ. செல்வம், நா. பாலகிருஷ்ணர், இ. பாக்கியம் மற்றும் நா. செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அ. நாகேஸ்வரி, சி. பாலகிருஷ்ணர் மற்றும் சி. சபாரத்தினம் (கனடா), சி. கதிரமலை, சி. செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.08.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
காலஞ்சென்ற இராசரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் பிள்ளைகள்.

*கலைமகள் வீதி,*
*கல்வியங்காடு.* (63285)

### சின்னத்துரை அருளானந்தம்

**(அருள் லொறி உரிமையாளர்)**

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருளானந்தம் நேற்று (11.08.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. கேதீஸ்வரன் (மகன்).

*ஜி.பி.எஸ். றோட்,*
*கல்வியங்காடு,*
*தொ.பே. 0776 705666.*

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org